**இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் - 2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் (''கூட்டுத்தாபனம்'') 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து கூட்டுத்தாபனத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சங்கம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின்

பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை. | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 01 - நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்.<br>நியமத்தின் 29 ஆம் பந்திக்கு முரணாக ரூபா 118.53 மில்லியன் ஆன வட்டிப்பணம், கைப்பற்றப்பட்ட | காணி கைப்பற்றுவதற்காக செலுத்த வேண்டிய | கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க |

| | | | |
|---|---|---|---|
| | காணிக்காக செலுத்த வேண்டிய இழப்பீட்டின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | இழப்பீட்டுப் பணத்தை தீர்த்துவைப்பதற்காக நீண்டகாலம் எடுக்கின்றமையால் மற்றும் குறுங்காலத்தில் இந்த இழப்பீட்டை தீர்த்துவைத்தல் எதிர்பார்க்கப்படாதிருந்தமையால் நடைமுறையல்லாப் பொறுப்புக்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. | பொறுப்புக்கள் இனங்காணப்படல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 12 - வருமான வரி | | |
| (i) | கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட கணக்கு குறிப்பு இலக்கம் 07 இன் பிரகாரம் வரி செலவினம் ரூபா 489.67 மில்லியன் ஆக இருந்ததுடன் அந்த செலவினத்தில் திறைசேரிக்காக செலுத்தப்பட்ட விஷேட வரி ரூபா 25 மில்லியன் தொகையும் உள்ளடக்கி இருந்தமை அவதானிக்கப்பட்டது. மேற்கூறப்பட்ட நியமத்தின் 05 ஆம் பிரிவிற்கு முரணாக திறைசேரிக்காக செலுத்தப்பட்ட விஷேட வரி அந்த செலவினத்தில் உள்ளடக்கியதன் காரணமாக வருமான வரிச் செலவினம் அப்பெறுமதியால் மிகைக் கணிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டு முதல் இது வரிக்குப் பின்னரான இலாபத்திலிருந்து பெறப்படுகின்ற பகிர்ந்தளித்தலாக வருமானக் கூற்றில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ii) | நியமத்தின் 61 (A) (அ) பந்திக்கு முரணாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள ஆயுட்கால எண்ணிக்கை நலன்கள் (Actual gain on Defined Benefit Plans) ரூபா 39.29 மில்லியனுக்குரிய பிற்போட்ட வரிச் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம். | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 - ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | | |
| (i) | நியமத்தின் 36 ஆம் பிரிவின் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் | அவதானிப்புக்களுடன் | இலங்கை கணக்கீட்டு |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் உபகரணங்களுக்குரிய ஏதாவது விடயம் ஒன்றை மீள் மதிப்பீடு செய்வதாயின் அந்த விடயத்திற்குரிய சொத்து வகுப்பும் மீள் மதிப்பீடு செய்யவேண்டியிருந்த போதிலும் ரூபா 301.39 மில்லியன் பெறுமதியான வாகனம் மாத்திரம் 2020 சனவரியில் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும் கூட்டுத்தாபனத் திற்குரியதாக காணப்பட்ட முறையே ரூபா 24.74 மில்லியன் மற்றும் ரூபா 26.47 மில்லியன் கிரயமான 160 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஒரு ஜீப் என்பன மீளாய்வாண்டின் போதும் மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இணங்குகின்றோம். | நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ii) | நியமத்தின் 51 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்ய வேண்டியிருந்த போதிலும் 2022 திசம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் இழிவுப் பெறுமதி ரூபா 2,066.84 மில்லியன் ஆன சொத்துக்கள் தொடர்பாக அவ்வாறு மீளாய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br>மேலும் இந்த முறையில் பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம மீளாய்வு செய்யாமையின் காரணமாக கிரயம் ரூபா 670.81 மில்லியன் ஆன 3,344 சொத்துக்கள் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த சொத்துக்கள் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்றது. | எதிர்காலத்தின் போது சொத்துக்களில் பெறுமானத்தேய்வு செய்யக் கூடிய பெறுமதியை மதிப்பீடு செய்யும் போது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சொத்தின் தற்போதைய பெறுமதி அதன் கொள்வனவு செய்யப்பட்ட பெறுமதியின் ஏற்பாட்டில் 5 சதவீதம் அல்லது அதற்கு மேற்பட்டு இருக்கும் என்ற எண்ணக்கருவின் அடிப்படையில் 5 சதவீத Residual Value இன் கீழ் பெறுமானத் தேய்வு ஏற்பாடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 40 – முதலீட்டு ஆதனங்கள் | | |
| (i) | நியமத்தின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் வாடகை உழைத்தல் | நாரம்மல காணி மற்றும் கொழும்பு 03 | இலங்கை கணக்கீட்டு |

| | | | |
|---|---|---|---|
| | அல்லது மூலதன பெறுமதியை அதிகரித்தல் அல்லது அந்த இரண்டு நோக்கங்களுக்காக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள் முதலீட்டு சொத்துக்கள் ஆகும். எனினும் தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட பிரகாரம் அதற்கு முரணாக குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த நாரம்மல காணி மற்றும் கொழும்பு 03 இல் 22 ஆவது ஒழுங்கையில் 02 காணிகள் முதலீட்டு ஆதனமாக இனங்காணப்படாமல் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | இல் 22 ஆவது ஒழுங்கையில் காணி என்பன 2023 ஆம் ஆண்டு முதல் முதலீட்டு சொத்துக்களின் கீழ் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ii) | நிமயமத்தின் 79(உ) பந்திக்கு முரணாக கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான கிரயம் ரூபா 584.95 மில்லியன் ஆன காணிகள் மற்றும் 07 கட்டிடங்களின் நியாயமான பெறுமதி நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை. | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்க ளுக்காக கூட்டுத்தாபனத்தால் பின்பற்றப்படுகின்ற கணக்கீட்டு முறைமையாகும் அவற்றின் நியாயமான பெறுமதி ஒன்று நாங்கள் காண்பிக்கவில்லை. | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க முதலீட்டு சொத்துக்களில் நியாயமான பெறுமதி காண்பிக்கப்படல் வேண்டும். |
| (உ) | இலங்கை நிதி அறிக்கையிடல் நியம இலக்கம் 08 | | |
| | நியமத்தின் 11 ஆவது பந்தியின் பிரகாரம் நிறுவனத்தால் தமது ஒவ்வொரு செயற்பாட்டு பிரிவுகள் தொடர்பான தகவல்கள் தனித்தனியாக அறிக்கையிட வேண்டியிருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தால் பேணிச்செல்லப்படுகின்ற செயற்பாடுகளுக்கிடையே பிரதான பிரிவை இனங்கண்டு நியமத்தின் பிரகாரம் தனிப்பட்ட ரீதியில் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. | ஆண்டறிக்கையின் பக்க இலக்கம் 06 முதல் 60 வரை ஒவ்வொரு பிரிவின் செயற்படு நிலை நீண்ட ரீதியில் தெளிவுபடுத்தப்பட்டு ள்ளது. அதற்கு மேலதிகமாக நிதிக்கூற்றுக்க ளுக்கான குறிப்பு 1 மற்றும் 2 இன் கீழ் பிரதான செயற்பாட்டு பிரிவுகளின் வருமானம் மற்றும் நேர் கிரயங்கள் தனித்தனியாக வெளிப்படுத்தப்பட்டு | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க ஒவ்வொரு செயற்பாட்டு பிரிவுகள் தொடர்பான தகவல்கள் தனித்தனியாக அறிக்கையிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ள்ளது. | |
| (ஊ) | இலங்கை நிதி அறிக்கையிடல் நியம இலக்கம் 13 | | |
| | நியமத்தின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தால் முதலீடு செய்யப்பட்ட ஆதனங்கைகளை மதிப்பீடு செய்யும் போது தகைமை பெற்ற மதிப்பீட்டாளர்களை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிதி நிலைமைக் கூற்றில் எமது முதலீட்டு ஆதனங்கள் கிரயத்தில் காண்பிக்கப்பட்டதுடன் வெளித் தரப்பினர் மூலம் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி பெற்றுக்கொள்ளும் போது கவனத்திற்கொள்ளக் கூடிய கிரயம் ஒன்றை செலவிட வேண்டி ஏற்பட்டமையால் உள்ளக குழுவொன்றின் மூலம் பெறுமதி மதிப்பிடப்பட்டு அது மேலதிக தகவல்களின் கீழ் நியாயமான பெறுமதி காண்பிக்கப்பட்டுள்ளது. | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (எ) | இலங்கை நிதி அறிக்கையிடல் நியம இலக்கம் 15 | | |
| (i) | கடந்த ஆண்டுகளின் போது சேவைப் பங்களிப்பு ஒப்பந்த வருமானத்தில் 51 சதவீதம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின்படி செயற்பாடுகள் பூர்த்தி செய்து சேவைப் பங்களிப்பில் இருந்து வழங்கப்பட்டிருந்த 13 ஒப்பந்தங்களின் இறுதி பட்டியலின் அடிப்படையில் வருமான நியமத்தின் பிரகாரம் முழுமைப்படுத்தலின் பிரகாரம் கால ரீதியில் (Completion Stage) இனங் காணப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் பட்டியல் உறுதிப்படுத்தும் தாமதத்தின் காரணமாக மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 170.95 மில்லியனாலும், அதற்குரிய செலவினம் மிகைக் கணிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது. மேலும் | 2022 ஆம் ஆண்டிற்காக கணக்கீடு செய்யப்பட்டுளள சகல ஒப்பந்த வருமானங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கியிருப்பதுடன் உறுதிப்படுத்தப்பட்ட வேலைச் சான்றிதழின் அடிப்படையில் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க ஒப்பந்தங்களின் முழுமையான பூர்த்தியின் பிரகாரம் ஒப்பந்த வருமானம் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டில் மேற் கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மேலும் பட்டியல் அளவொன்று சேவைப் பங்களிப்பாளர்களினால் உறுதிப்படுத்தாமையின் காரணமாக உரிய வருமானம் மற்றும் செலவினங்கள் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் அப் பெறுமதியை தீர்மானிப்பதற்காக தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | | |
| (ii) | கடந்த ஆண்டுகளின் போது ஒப்பந்த செயற்பாடுகள் உற்பத்தி செய்யப்பட்டு சேவை பங்களிப்பாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்த 06 செயற்திட்டங்களின் ஒப்பந்த செலவினமான ரூபா 13.52 மில்லியன் முழுமை செயற்பாட்டின் பிரகாரம் இனங்காணப்படாமல் மீளாய்வாண்டிற்குரிய ஒப்பந்த செலவினத்தில் சீராக்கப்பட்டதன் காரணமாக மிளாய்வாண்டின் செலவினம் அப்பெறுமானத்தால் மிகைக் கணிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது. | சேவைப் பங்களிப்பாளர்களால் வேலை உறுதிப்படுத்தப்படாத சந்தர்ப்பங்களின் போது உரிய செலவினம் நடைமுறை வேலையின் கீழ் (WIP) முன்கொண்டு செல்லப்படுவதுடன் வருமானம் கணக்கீடு செய்யப்படுகின்ற சந்தர்ப்பத்தில் செலவினமாகவும் கணக்கீடு செய்யப் படுகின்றது. | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க ஒப்பந்தச் செலவினம் முழுமையான விடயங்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படல் வேண்டும். |
| (ஏ) | இலங்கை நிதி அறிக்கையிடல் நியம இலக்கம் 16 – குத்தகை | | |
| (i) | பெரும்பாக கொழும்பு வெள்ள நீர் கட்டுப்படுத்துதல் மற்றும் சுற்றாடலை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தை அபிவிருத்தி நடவடிக்கைகளினால் நிர்க்கதிக்கு உட்பட்டவர் களுக்காக வீடுகளை வழங்கும் நோக்கில் கூட்டுத்தாபனத்தால் ரூபா 86.1 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட கொலன்னாவ சுதுநெலும்புறயில் 144 வீடுகள், 2001 ஆம் ஆண்டின் போது கையளித்தல் பத்திரம் மூலம் நிர்க்கதியானவர்களுக்காக வழங்கப்பட்டிருந்தது. 2022 | சுதுநெலும்புற கடன் பட்டோர் மீதியில் உள்ளடக்கியுள்ள வட்டி வருமானம் தனித்தனியாக இனங்காண முடியுமாக இருந்த போதிலும் அதனை தனிப்பட்ட ரீதியில் கணக்கீடு செய்தல் நோக்கமொன்று இல்லாதிருந்தமையினால் மொத்த வருடாந்த பெறுமதி வருமானமாக | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திசம்பர் 31 இல் உள்ளவாறு இந்த வீட்டு நலனாளிகளிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 33.51 மில்லியன் பெறுமதி நியமத்தின் பிரகாரம் கடன்பற்றோர் மற்றும் வட்டி வருமானமாக தனித்தனியாக இனங்காணப்படாமல் கடன்பட்டோர் மற்றும் ஏனைய வருமானமாக நடைமுறைச் சொத்துக்களின் கீழ் நிதிக்கூற்றுக்களில் இனங்காணப் பட்டிருந்தது. | கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | |
| (ii) | கூட்டுத்தாபனத்தால் காணி மற்றும் கட்டிட வாடகை அடிப்படையில் வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்த மற்றும் அதன் வாடகைக் காலம் நீடிக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களின் போது முறையாகவும் காலரீதியிலும் வாடகை உடன்படிக்கையில் கைச்சாத்திடப்படாதிருந்த வாடகைகளை அறவிடல் காலரீதியில் மேற்கொள்ளப்பாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. உரிய நிலுவை வாடகைப் பணம் செலுத்தாதுள்ள சந்தர்ப்பங்களின் போது தமது காணி மற்றும் கட்டிடங்களுக்குரிய தரப்பினர்களிடமிருந்து கையேற்பதற்கு இயலுமை காணப்பட்ட போதும் மேற்கூறப்பட்ட நிலுவை வாடகைப்பணம் செலுத்தும் வரை உடன்படிக்கையில் கைச்சாத்திடாமல் அந்த ஆதனங்களை பயன்படுத்துவதற்கு வாடகையாளர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப் படுத்தப்பட்டது. அதன் பிரகாரம் கடந்த ஆண்டுகளுக்குரியதான பிரகாரம் கூட்டுத்தாபனத்தால் 53 வெளித்தரப்பினர்களுடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் கிடைக்க வேண்டிய வாடகை வருமானம் ரூபா 151.53 மில்லியன் முன்னைய ஆண்டுகளுக்கு உரியதாக சீராக்கப்படாமல் | வாடகை வருமானம் உரிய வாடகை உடன்படிக்கை கைச்சாத்திட்ட பின்னர் அல்லது உரிய உடன்படிக்கை தொகை செலுத்தப்பட்டதன் பின்னரே கணக்கீடு செய்யப்படுகின்றது. அதன் பிரகாரம் கணக்காய்வு அவதானிப்புக்களில் சுட்டிக்காட்டப் பட்டுள்ள விடயங்களுடன் இணங்குகின்றோம். | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

மீளாய்வாண்டின் போது இனங்காணப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் வருமானம் அப்பெறுமதியால் மிகைக் கணிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கூட்டுத்தாபனத்திற்கு விடுவித்துக்கொள்ளும் அடிப்படையில் (Free Hold Basis) அரசாங்கத்தால் வழங்கப்பட்டிருந்த முத்துராஜவலயில் அமைந்துள்ள 02 ஏக்கர் 03 றூட் 34.51 பேர்ச் காணியை விற்கும் போது அதற்காக செலவிடப்பட்ட அபிவிருத்தி செலவினம் மாத்திரம் அறிவிட்டு மிகுதி தொகை அரசாங்கத்தின் ஒன்றிணைந்த நிதியத்தில் செலவு வைக்குமாறு மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் காண்பிக்கப்பட்டிருந்தது. அந்தக் காணி 2019 ஆம் ஆண்டின் போது விற்பனையிலிருந்து ரூபா 272.62 மில்லியன் பெறப்பட்டிருந்ததுடன் செலவிடப்பட்ட அபிவிருத்தி செலவினமான ரூபா 21.02 மில்லியன் மாத்திரம் குறைக்கப்பட்டு ரூபா 251.60 மில்லியன் ஆன அந்த மிகுதிப் பணம் 2023 நவம்பர் வரையும் திரண்ட நிதியத்தில் செலவுவைக்கப்படாதிருந்ததுடன் செலுத்த வேண்டிய தொகை பொறுப்பாக இனங்கண்டு அதற்காக நிதிக்கூற்றுக்களில் ஒதுக்கீடுகளும் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | கூட்டுத்தாபன சட்டத்தின் 3(அ) பிரிவின் கீழ் இந்த கூட்டுத்தா பனத்திற்கு கையளிக்கப்பட்டுள் ள காணி விற்பனையின் கீழ் அகற்றப்படுகின்ற சந்தர்ப்பங்களின் போது அந்த காணிக்கான அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதி காணி ஆணையாளர் நாயகத்திற்கு செலுத்தப்படல் வேண்டும். அதன் பிரகாரம் செலுத்த வேண்டிய அபிவிருத்தி செய்யாத பெறுமதி 2019 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அபிவித்தி செய்யப்படாத பெறுமதியில் உள்ளடக்கி தயாரிக்கப்பட்ட ஆவணங்களில் உள்ளடக்கப்பட்டுள் ளதுடன் அந்த தொகையை தீர்க்கின்ற முறை தொடர்பாக விசாரிக்கப்பட்டுள்ள து. | அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் மிகுதி தொகை அரசாங்கத்தின் ஒன்றிணைந்த நிதியத்திற்கோ அல்லது காணி ஆணையாளர் நாயகத்திற்கோ செலுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | தற்போது கூட்டுத்தாபனத்தால் பயன்படுகின்ற இலத்திரனியல் ஆவணங்கள் முகாமைத்துவ முறைமை (Electronic Document Management System) (EDMS) இற்காக செலவிடப்பட்ட ரூபா 6.23 மில்லியன் கற்பனைச் சொத்தாக இனங்காணப்படாமல் நடைமுறை மூலதன வேலையின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப் பட்டிருந்தது. | இந்த முறைமை கற்பனைச் சொத்தாக இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்படும். | அறிமுகப்படுத்தப்பட்ட முறைமை பயன்படுத்துவதாயின் கற்பனைச் சொத்தாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தால் வருமான வரி செலவினம் ரூபா 273.29 மில்லியன் ஆக கணிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2022/23 மதிப்பீட்டு ஆண்டிற்காக வருமான வரி ரூபா 309.31 மில்லியனாக கணிப்பிடப்பட்டிருந்தமையால் ஆண்டின் வரிச் செலவினம் ரூபா 36.02 மில்லியனால் குறைக்கணிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது. | 2022/23 மதிப்பீட்டு ஆண்டிற்கான வருமான வரி ரூபா 309.31 மில்லியனாக கணிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் குறை நிதிஏற்பாடு செய்யப்பட்ட தொகையான ரூபா 36.01 மில்லியன் தொகை 2023 ஆம் ஆண்டின் போது கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வருமான வரி கணிப்பிடுதல் சரியாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஈ) | காணிப்பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைகளின் பிரகாரம் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான காணி மற்றும் முதலீட்டு சொத்துக்களின் கூட்டுமொத்தம் 1075 ஏக்கர் 29.21 பேர்ச் ஆக இருந்த போதும் மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் காணி மற்றும் முதலீட்டு ஆதனங்களின் அளவு 66 ஏக்கர் 03 றூட் 5.13 பேர்ச் மாத்திரமாக இருந்தது. அதன் பிரகாரம் 1008 ஏக்கர் 01 றூட் மற்றும் 24.08 பேர்ச் காணி நிதிக் கூற்றுக்களில் இனங்காணப்பட்டிருக்கவில்லை. மேலும் கூட்டுத்தாபனத்தால் செயற்பாட்டு குத்தகையின் கீழ் வழங்கப்பட்டிருந்த மதிப்பீட்டுப் | 2023 ஆம் ஆண்டில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான காணிகள் சரியான இனங்கண்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதி ரூபா 39.73 மில்லியன் ஆன 03 காணிகளின் பெறுமதி முதலீட்டு ஆதனங்களாக காணி மற்றும் முதலீட்டு ஆதன பட்டோலைகளிலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (உ) | கூட்டுத்தாபனத்தால் 04 செயற்திட்டங்களுக்கு உரியதாக ரூபா 2.35 மில்லியன் மறை பெறுமதியுடைய ஒப்பந்த வருமானம் இனங்காணப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டில் ஒப்பந்த வருமானம் அப்பெறுமதியால் குறைக் கணிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பெறுமதி உண்மையாக உள்ளதுடன் அது பொருன்மையானதாக இல்லாதிருந்தமையால் கணக்கீடு செய்யப்பட்டுள்ள முறை சரியாகும். | மீளாய்வாண்டிற்குரிய செயற்திட்ட வருமானம் மாத்திரம் நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்படல் வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டின் இறுதியில் துணைக் கம்பனியான காணி மீட்டல் மற்றும் அபிவிருத்தி செய்யும் கம்பனியிலிருந்து கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்க வேண்டியதாக நிதிக் கூற்றுக்களில் ரூபா 238.87 மில்லியன் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் உரிய துணைக் கம்பனியின் ஏடுகளின் பிரகாரம் அது ரூபா 229.75 மில்லியனாக காண்பிக்கப்பட்டமையால் அதனிடையே ரூபா 9.12 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது. அவ்வாறே அந்தக் கம்பனிக்கு செலுத்த வேண்டியதாக கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களில் ரூபா 96.75 மில்லியன் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்தக் கம்பனியின் கணக்குகளில் கூட்டுத்தாப னத்திலிருந்து கிடைக்க வேண்டியதாக ரூபா 106.25 மில்லியன் காண்பிக்கப்பட்டமையால் அதனிடையே ரூபா 9.3 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது. இந்த வேறுபாடுகளுக்கான காரணங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம். 2023 ஆம் ஆண்டின் போது சரிசெய்யப்படும். | துணைக்கம்பனிகளுடன் காணப்படுகின்ற உள்ளக கொடுக்கல் வாங்கல்களை உரிய சரியான பிரகாரம் இணக்கம் செய்து கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | மீளாய்வாண்டிற்குரிய சசகாவா கட்டிடம் காணப்படுகின்ற காணிக்காக கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்க வேண்டிய குத்தகை வருமானம் ரூபா 2.44 மில்லியன் ஆக இருந்த போதும் 2022 ஆம் ஆண்டில் குத்தகை வருமானமாக ரூபா 7.03 மில்லியன் ஆக இனங்காணப் பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் இலாபம் ரூபா 4.59 மில்லியனால் மிகைக் கணிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டிற்காக குத்தகை வருமானம் ரூபா 2.44 மில்லியன் ஆகும். 2022 ஆம் ஆண்டின் போது மேற்கூறப்பட்ட வரி உடன்படிக்கைக்குரிய வீதம் 2018 யூலை 01 ஆம் திகதி முதல் அமுல்படும் வகையில் மீண்டும் ஆய்வு செய்யப் பட்டு அதிகரிக்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் உடன்படிக்கைப் பெறுமதிக்கு சீராக்கப்பட்ட பின்னர் கிடைக்க வேண்டிய நிலுவை தொகை மீளாய்வாண்டின் போது கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குவதுடன் 2018 முதல் 2021 ஆம் ஆண்டு வரை உரிய நிலுவைப் பணம் 2022 ஆம் ஆண்டில் கணக்கீடு செய்வதற்கு அது காரணமாக இருந்தது. | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க குத்தகை வருமானம் இனங்காணப்படல் வேண்டும். |

**1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி ரூபா மில்லியன் | நேரொத்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதி ரூபா மில்லியன் | வேறுபாடு ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| மீளாய்வாண்டில் காணிக்காக செலுத்த வேண்டிய இழப்பீடு | 122.43 | 130.36 | 7.93 | இந்த வேறுபாடு 2023 ஆம் ஆண்டின் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியான பட்டோலைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

**1.5.4 அதிகாரப் பலம் இன்றிய கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மெதமுலன டி ஏ ராஜபக்ஷ ஞாபகார்த்த நிலையத்தை நிர்மாணிப்பதற்காக அறவிட வேண்டியதாக கூட்டுத்தாபனத்தால் நீதிமன்றத்திற்கு அறிக்கையிடப்பட்ட மற்றும் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட செலவினங்களுக்கு இடையே ரூபா 47.37 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக அந்த செலவினங்கள் செயற்திட்டத்திற்காக செலவிடப்படாத செலவினமாக இனங்காணப்பட்டி ருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் இந்த மேலதிக செலவினங்களுக்காக பொறுப்வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் பொதுத்திறைசேரியில் அங்கீகாரத்தை | கௌரவ நீதிமன்ற தீர்மானத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த விடயங்களையும் கவனத்திற் கொண்டு கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தைப் பெற்று புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இந்த பதிவழித்தல் தொடர்பாக இதுவரையில் பொதுத் திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு அறிவிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் உரிய சாத்தியவள ஆய்வு மேற்கொண்டு சரியான மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். வழுக்களுடன் செலவின ஆவணங்கள் தயாரித்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக விசாரணை நடாத்தி உரிய ஒழுக்காற்று நடவடிக்கைகள் மற்றும் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெற்றுக்கொள்ளாமல் செலவினங்கள் இலாபத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டு புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | அத்துருகிரிய கொத்தலாவெல அதிவேக வீதியில் உள்ளக இடமாற்றல் சார்ந்த வரிசை பூங்காவை நிர்மாணித்தல் மற்றும் நீர்வடிகாலமைப்பை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்காக வரிசை அமைச்சிலிருந்து ஒப்பந்த மானியம் வழங்கல் அல்லது அதற்காக நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. சனாதிபதி அவர்கள் வழங்கிய வாய்மூல ஆலோசனையின் பிரகாரம் இந்த ஒப்பந்தம் கூட்டுத்தாபனத்தால் 2020 திசம்பர் 15 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்த போதும் அதற்காக பொதுத்திறைசேரியின் அல்லது அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அதற்கான அமைச்சரவை தீர்மானத்தில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பரிந்துரையின் படி செயற்திட்ட முன்மொழிவுக்காக விரிவாக சாத்தியவள ஆய்வு மேற் கொள்ள வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. 2022 திசம்பர் மாதம் வரையில் செயற்திட்டத்திற்கான கூட்டுத்தாபன நிதியத்திலிருந்து ரூபா 213.95 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் மேற்கொள்ளப்பட்ட வேலைகளின் பெறுமதி ரூபா 191.92 மில்லியன் நடைமுறை விலையாக காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே நிர்மாணிக்கப்பட்ட | இந்த செயற்திட்டத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட தொகை ரூபா 796 மில்லியன் ஆனமையால் மற்றும் விடப் பரப்பை விரிவுபடுத்தியதன் காரணமாக இந்த செயற்திட்டத்திற்காக நிதி ஏற்பாடு பெற்றுக்கொள்ளலில் பிரச்சினையான நிலைமையின் பிரகாரம் செயற்திட்டத்தின் 02 கட்டங்கள் மேற்கொள்ளாதிருப்பதற்கும் முகாமைத்துவம் தீர்மானித்திருந்தது. 2022 திசம்பர் 10 இல் உள்ளவாறு செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்ட மொத்த செலவினம் ரூபா 213.95 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் மேற்கூறப்பட்ட செயற்திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக 1.5 கிலோ மீற்றர் நீளத்தையுடைய பகுதி மாத்திரம் நிர்மாணித்து பூர்த்திசெய்யப்பட்டுள்ளது. | வருடாந்த வரவுசெலவுத் திட்ட மதிப்பீட்டின் மூலம் நிதி ஏற்பாடு ஒதுக்கப்படாமை மற்றும் உரிய பிரகாரம் முன் அங்கீகாரம் பெறப்படாமல் செயற்திட்டத்தை ஆரம்பிக்காதிருத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயற்திட்டத்தை பராமரித்து பேணிச் செல்வதற்காக கடுவல மாநகர சபைக்கு கையளிக்கப்படாதிருந்தமையின் காரணமாக 2023 நவம்பர் வரை ரூபா 3.81 மில்லியன் பராமரிப்பு செலவினமொன்றைச் செய்வதற்கு கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்டிருந்தது. | | |
| (இ) | பேரேவெவ சுத்திகரிக்கும் செயற்திட்டத்திற்காக ரூபா 60 மில்லியன் நில நீர் இயந்திரம் கொள்வனவு செய்வதற்காக அமைச்சரவை அங்கீகரித்த எல்லையினை விஞ்சி அமைச்சர வையின் முன் அங்கீகாரம் இன்றி ரூபா 83.3 மில்லியன் பெறுகைகள் கையளித்தமையால் ரூபா 23.3 மில்லியன் கிரய வேறுபாடு கூட்டுத்தாபன நிதியத்தில் செலவிட வேண்டி ஏற்பட்டிருந்தது. உரிய பணத்தை தீர்த்துவைத்தல் தொடர்பாக வழங்குநருடன் ஏற்படுத்தப் பட்ட ஒட்டுமொத்த நிபந்தனையின் பிரகாரம் இயந்திரத்திற்காக ரூபா 94.19 மில்லியன் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்ததுடன் தாமத செலுத்துதலுக்காக வட்டியாக ரூபா 11.73 மில்லியன் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | இந்தக் கொள்வனவு தொடர்பாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் விசாரணை நடைபெறுவதுடன் நீதிமன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | திறைசேரி நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்ட திட்டமிடப்பட்ட முறையில் உரிய முகாமைத்துவத்துடன் அமுல்படுத்த வேண்டி இருந்ததுடன் சட்ட ரீதியான நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் தவறிழைத்த தரப்பினருக்கு ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திறைசேரி நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் அமுல்படுத்தப்படுகின்ற செயற்திட்டம் தவிர கூட்டுத்தாபனத்தால் மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு செயற்திட்டத்திற்கும் உரிய நிதிசார் மற்றும் பௌதீக செயல் முன்னேற்றத்தைக் காண்பிக்கின்ற செயலாற்றல் | நிதிசார் மற்றும் பௌதீக செயல் முன்னேற்றத்தைக் காண்பிக்கின்ற செயலாற்றல் அறிக்கை கோரப்பட்ட பிரகாரம் கணக்காய்விற்கு வழங்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை | கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு சான்றுகள் / தகவல்கள் விரைவாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் |

| | | | |
|---|---|---|---|
| | அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. அதன் காரணமாக அந்த செயற்திட்டங்களின் செயலாற்றலை மதிப்பிடுவதற்கு கணக்காய்வின் போது முடியாதிருந்தது. | வழங்கப்பட்டுள்ளது. | வேண்டும். |
| (ஆ) | செயல் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது எந்தவொரு நிதிசார் செயல்முன்னேற்றமும், பௌதீக செயல் முன்னேற்றமும் பெறப்படாதிருந்ததுடன் பாணந்துறை நகரத்தில் வெள்ள நீரைக் கட்டுப்படுத்தும் செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 4.31 மில்லியன் செலவினமாக நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. இந்த செயவினங்களின் சரியான தன்மை மற்றும் பொருத்தமான தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக தேவையான விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | நிதிசார் மற்றும் பௌதீக செயல் முன்னேற்றத்தைக் கைப்பெற்றாமல் கொடுப்பனவுகள் மேற்கொள்ள முடியாதிருத்தல் வேண்டும். |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 5,316.38 மில்லியன் கடன்பட்டோர் மற்றும் ஏனைய பெறவேண்டிய மீதியை ரூபா 1,922.12 மில்லியன் வியாபார கடன் பட்டோர் மீதி பெறுமதியில் 02 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையே அறவிட வேண்டி காணப்பட்ட மீதி ரூபா 611.11 மில்லியன் ஆக இருந்ததுடன் 05 வருடங்களை விஞ்சிய கடன்பட்டோர் மீதி ரூபா 122.79 மில்லியன் ஆகும். அவ்வாறே அந்த வியாபாரக் கடன்பட்டோர் மீதியில் உள்ளடக்கப்பட்ட சேவைப் பங்களிப்பு செயற்திட்டங்களில் கூட்டுத் தாபனத்திற்கு கிடைக்க வேண்டிய | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றோம். | கூட்டுத் தாபனத்திற்கு கிடைக்க வேண்டிய பணத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் கடன்பட்டோர் மீதி உறுதிப்படுத்தப்படல் வேண்டும். |

மொத்த தொகை ரூபா 1,077.88 மில்லியன் ஆக இருந்ததுடன் அதில் ரூபா 210.45 மில்லியன் 04 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான காலத்தில் இருந்தும், ரூபா 122.02 மில்லியன் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தில் இருந்தும் காணப்பட்டது.

### 1.6.2 செலுத்தவேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) (i) | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட ரூபா 3,230.58 மில்லியன் செலுத்த வேண்டிய வியாபாரம் மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதிகளில் உள்ளடக்கப்பட்டு மீண்டும் செலுத்த வேண்டிய வைப்பு ரூபா 94.26 மில்லியன் ஆக இருந்ததுடன் அந்த மீதியில் உள்ளடக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தால் கையளிக்கப்பட்ட கேள்விகளுக்குரிய மீளாய்வாண்டின் இறுதி வரையில் மீளச் செலுத்த வேண்டிய கேள்வி வைப்பு ரூபா 45.06 மில்லியன் தொகையில் ரூபா 11.46 மில்லியன் மீதியொன்று 03 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான காலத்தில் இருந்தும், ரூபா 14.39 மில்லியன் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தில் இருந்தும் காணப்பட்டது. | இந்த மீதியில் அவ்வாறு மீண்டும் வைப்பு செய்யப்பட்ட 2022 திசம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கோரப்படாத வைப்புக்களின் பெறுமதி உள்ளடக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் 570 மற்றும் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | அவ்வாறே ரூபா 1,574.19 மில்லியன் ஆன ஒப்பந்த கடன்கொடுத்தோர் மீதியில் உள்ளடக்கப்பட்ட ரூபா 1,347.43 மில்லியன் ஒப்பந்த கடன் கொடுத்தோர் மீதியில் 02 இற்கும் 04 வருடங்களுக்கும் | அவதானிப்புகளுடன் இணங்குகின்றோம். | தீர்த்துவைக்கப் படாத மீதிகளை விரைவாக தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இடையிலான காலத்தில் இருந்து தீர்க்கப்படாதிருந்த கடன்கொடுத்தோர் மீதி ரூபா 4.74 மில்லியன் ஆக இருந்ததுடன் 04 வருடங்களுக்கு மேற்பட்ட மீதி ரூபா 210.5 மில்லியன் ஆகும். | | |
| (ஆ) | கடல் மணல் குவிப்பதற்காக 2011 ஆம் ஆண்டின் போது வெளிநாட்டு கம்பனியொன்றுக்கு செலுத்த வேண்டிய யூரோ 575,000 அதாவது அத்திகதியில் ரூபா 85.67 மில்லியன் மீளாய்வாண்டின் திசம்பர் 31 வரையும் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்த துடன் அத் திகதியில் இந்த பொறுப்புக்கள் ரூபா 222.48 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. | இது 2008 யூன் 26 ஆம் திகதி பிரதி ஆணையாளர் உள்நாட்டு இறை வரி (சர்வதேச பிரிவு) இற்கு கடிதம் அனுப்பி றோட் நில்சன் கம்பனிக்கு அத்திகதி வரையில் செலுத்த வேண்டிய யூரோ 575,000 ஆக இருந்தமையும், அந்த தொகையை மேலதிக ஆலோசனை பெறும் வரை நிறுத்தி வைக்குமாறும் அறிவிக்கப்பட்டிருந்தது. உள்நாட்டு இறைவரித் திணைக்களம் இந்த தொகை தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டிய முறை அறிவிக்கப்படும் வரை அந்த தொகையை செலுத்துவதற்கு முடியாதிருந்தது. | ரூபாய் குறைப்பெறுமதி அடைந்தமையின் காரணமாக பொறுப்புக்களை தீர்த்துவைக்கும் போது அந்நியச் செலாவணி நட்டம் ஏற்பாடு ஆபத்து காணப்படுகின்றமை யால் செலுத்த வேண்யடி மீதியை விரைவாக தீர்த்துவைப்பபதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 தொடர்புடைய தரப்பினர் மற்றும் தொடர்புடைய தரப்பினர்களுடான கொடுக்கல் வாங்கல்கள் வெளிப்படுத்தப்படாமை.**

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 24 இன் பிரகாரம் மற்றும் எண்ணக்கரு ரீதியான சட்டகத்தின் பிரகாரம் கூட்டுத்தாபனம் மற்றும் துணைக் கம்பனிகளுக்கிடையிலான பொருட்கள், ஆதனங்கள், ஏனைய சொத்துக்களை விற்பனை செய்தல், குத்தகைக்கு வழங்குதல் அல்லது கையேற்றல் தொடர்பான உரிய | கூட்டுத்தாபனம் மற்றும் துணைக் கம்பனிகளுக்கு இடையே இடம்பெறுகின்ற கொடுக்கல் வாங்கல்கள் நிதிக்கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் 22.2.1 மற்றும் 22.2.2 இன் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது. | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களில் போதியளவான பிரகாரம் வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தகவல்களில் விரிவான மற்றும் பொருன்மையான தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்களில் அந்த தகவல்கள் வெளிப்படுத்தப்படவில்லை. | | |
| (ஆ) | கடல் மணல் பொதிசெய்து விற்பனை செய்யும் செயற்திட்டம். | | |
| (i) | நில மீட்டல் மற்றும் அபிவிருத்தி செய்யும் கம்பனியினால் கடல் மணல் அகழ்ந்து விற்பனை செய்யும் வணிக வியாபாரம் ஒன்றாக ஆரம்பிக்க வேண்டியமைக்கு இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையினால் 2018 ஒக்டோபர் 04 ஆம் திகதி தீர்மானிக்கப் பட்டிருந்ததுடன் அதற்காக கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு கூட்டுத்தாபனத்தால் 200 மில்லியன் கடன் தொகை கம்பனிக்கு 2019 மே 07 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது. இதற்காக கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக கூட்டுத் தாபனத்திற்குச் சொந்தமான காணி ஒன்று வாடகை உடன்படிக்கை கைச்சாத்திடாமல் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும் 2021 யூன் 14 ஆம் திகதி வரையிலும் செயற்திட்டத்திற்காக ரூபா 382.50 மில்லியன் செலவிடப் பட்டிருந்த போதிலும் உயர்ந்த மூலதன முதலீட்டினை உடைய செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் எந்வொரு செயற்திட்ட மதிப்பீடும் அல்லது சாத்தியவள ஆய்வு மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டம் 2021 ஆம் ஆண்டின் போது முடிவுறுத்தப்பட்டிருந்த துடன் உரிய காணி மற்றும் அதில் நிர்மாணிக்கப்பட்ட மணல் அகழும் நிலையம் மணல் | நிலம் மீட்டல் மற்றும் அபிவிருத்தி செய்யும் கம்பனி (REDECO) இனால் ஸ்தாபனத்திற்குச் சொந்தமான காணியொன்றில் அமுல்படுத்தப்பட்ட கடல் மணல் உலர்த்தி விற்பனை செய்யும் செயற்திட்டத்திற்காக தேவையான நிதி வசதிகள் இந்த கூட்டுத் தாபனத்தால் வழங்கப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தை ஆரம்பிக்கும் பிரதான நோக்கமாக REDECO கம்பனிக்கு நிலையான வருமான வழியொன்றை அமைத்துக் கொடுப்பதாக இருந்த போதிலும் அந்த செயற்திட்டம் எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் வெற்றியடைந்திருக்கவி ல்லை. | செயற்திட்டத்தை ஆரம்பிக்கும் போது சரியான சாத்தியவள ஆய்வின் பின்னர் செயற்திட்டம் ஆரம்பிக்கப்படல் வேண்டும். |

உலர்த்தும் நிலையம் தனியார் நிறுவனமொன்றுக்கு வாடகை அடிப்படையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

**1.8 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை நிதிப்பிரமாணம் 757(2) | வருடாந்த பொருள் மெய்மை ஆய்வு சபை அறிக்கை கிடைத்த பின்னர் முரண்பாடுகள், பற்றாக்குறை மற்றும் தொலைந்து போனமை எதுவும் ஏற்படுமாயின் கணக்கீட்டு உத்தியோகத்தரால் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கவேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இருப்பு மெய்மை ஆய்வின் போது ஏற்பட்டிருந்த ரூபா 4.1 மில்லியன் பற்றாக்குறை மற்றும் 5.2 மில்லியன் மிகை தொடர்பாக தேவையான சீராக்கங்கள் 2023 திசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | வருடாந்த இருப்பு மெய்மையாய்வின் போது இனங்காணப்பட்ட பற்றாக்குறைகள் மற்றும் மிகைகளை இனங்கண்டு அதற்கு பொறுப்பு வாய்ந்த களஞ்சிய பொறுப்பாளரிடமிருந்து அதற்கான காரணங்கள் பெறப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 2016 சனவரி 08 ஆம் திகதிய இலக்கம் 01/2016 என்ற அரச நிதி சுற்றறிக்கை | அவசர சேவைகளை நிறைவேற்றுவதற்காக வெளி நபர்களிடமிருந்து சேவைகள் பெறக்கூடியதாக இருந்ததுடன் அதன் போது நிறுவனத்தில் பொருத்தமான நபர் காணப்படாமைக்கு தனிப்பட்ட ரீதியில் ஏற்றுக்கொள்ளுமிடத்து அமைச்சின் செயலாளரின் தனிப்பட்ட அங்கீகாரத்தின் அடிப்படையில் இரண்டு மாதங்களுக்காக மாத்திரம் வெளி நபர்களிடமிருந்து சேவை பெற முடியுமாக இருந்த போதிலும் அதற்கு முரணான வகையில் 03 ஆலோசனையாளர்கள் சேர்க்கப்பட்டிருந்ததுடன் | இலங்கை நீர்பாசனத் திணைக்களத்தின் நீர்பாசன பொறியியலாளராக நீண்ட காலமாக சேவை அனுபவம் பெற்றுள்ள நீர்ப்பாசனை நிர்மாணத் துறை விஷேட நிபுணத்துவ அறிவுடைய அனுபவமுள்ள உத்தியோகத்தர் ஒருவர், நிதித்துறையில் விஷேட நிபுணர் மற்றும் SAP கணனி மென்பொருள் தொடர்பாக விஷேட அறிவினைக் கொண்ட உத்தியோகத்தர் என்ற மூன்று உத்தியோகத்தர்களின் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அவர்களுக்காக மீளாய்வாண்டிற்காக ரூபா 3.7 மில்லியன் ஆலோசனைக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது. | சேவை கூட்டுத் தாபனத்தின் மூலம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | |
| (இ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் 01/2021 | | | |
| (i) | வழிகாட்டிக் கோவையின் 2.3 ஆம் பந்தி | படிவம் 1 இன் பிரகாரம் 5 வருட காலப் பகுதிக்காக கூட்டிணைந்த திட்டம் தயாரிக்க வேண்டியிருந்ததுடன் வியாபார சூழலின் மாற்றங்களுக்கு இணங்க ஒவ்வொரு வருடமும் இந்த திட்டம் நாளதுவரையாக்கப்படல் வேண்டும். உரிய ஆண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் பொதுத்திறைசேரிக்கு கூட்டிணைந்த திட்டம் சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் 2022 ஆம் ஆண்டிற்காக கூட்டுத்தாபனத்தால் அதன் பிரகாரம் கூட்டிணைந்த திட்டமொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை . | 2023 - 2024 ஆண்டுகளுக்காக தயாரிக்கப்பட்ட அந்த கூட்டிணைந்த திட்டம் 2024 ஆம் ஆண்டிற்காக நாளதுவரையாக்கல் தற்போது மேற்கொள்ளப் படுகின்றது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | வழிகாட்டிக் கோவையின் 5.3 ஆம் பந்தி | வரிக்குப் பின் இலாபத்தில் 30 சதவீதம் திரண்ட நிதியத்தில் வழங்கப்படல் வேண்டும். அதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக வரிக்குப் பின் இலாபத்தில் ரூபா 81.4 மில்லியன் திரண்ட நிதியத்திற்கு செலுத்த வேண்டி இருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தால் ரூபா 25 மில்லியன் மாத்திரம் செலுத்தப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றோம். 2023 ஆம் ஆண்டின் போது பொதுத் திறைசேரிக்கு அனுப்பப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | கைநூலின் ஆம் பந்தி | 3.2 | சகல நிறுவனத்தினாலும் படிகளுக்கான கோரிக்கை, பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு பிரதியுடன் உரிய நிறுவனத்தின் பணிப்பாளர் சபை அங்கீகாரம் மற்றும் வரிசை அமைச்சின் பரிந்துரையுடன், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். எனினும் கூட்டுத்தாபனத்தால் 03 காலப் பகுதிக்கான தொழிற் தகைமைப் படி அந்த ஒவ்வொரு காலப் பகுதியின் போதும் 50 சதவீதம் அதிகரிக்கும் வகையில் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரம் செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது திறைசேரி அங்கீகாரத்துடன் செலுத்தப்பட்ட தொழிற் தகைமை படியின் பெறுமதி ரூபா 7.93 மில்லியன் ஆக இருந்தது. | பொறியியல் ரீதியான பணிகளில் ஈடுபட்டிருக்கின்ற சுய நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் அமுல்படுத்தப்படுகின்ற இந்த கூட்டுத் தாபனத்தின் சேவையில் ஈடுபடுகின்ற தொழில் தகைமையாளர்கள் கூட்டுத் தாபனத்தில் தொடர்ந்து இருக்கும் எதிர்பார்ப்பில் அபிவிருத்தி இலக்கை அடைந்து கொள்ளும் நோக்கிலும் கூட்டுத்தாபனத்திற்கு சமமான ஏனைய அரச நிறுவனங்களில் தொழில் தகைமையுள்ள வர்களுக்கு செலுத்தப்படுகின்ற படியினை கவனத்திற்கொண்டு பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் தொழில் தகைமை பெற்றவர்களுக்கான படி செலுத்துவதற்கு கூட்டுத்தாபனத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | கைநூலின் ஆம் பந்தி | 7.7 | தாய்க் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையால் அதன் துணைக் கம்பனிகளின் செயலாற்றலை மேற்பார்வை செய்வதற்காக வசதிகளை வழங்குவதற்கான கட்டமைப்பொன்று ஸ்தாபிக்கப்பட வேண்டியிருந்ததுடன் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியிருத்தல் வேண்டும். பணிப்பாளர் சபை துணைக் கம்பனிகளின் செயலாற்றல் | தற்போது உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தொடர்பாக பலந்துரையாடல் ஒன்று ஆகக் குறைந்தது காலாண்டிற்கு ஒரு தடவை நடாத்த வேண்டியிருந்ததடன் போதியளவான முதலீட்டின் அடிப்படையில் நலன்கள் உரித்தாகும் வகையில் உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதும் கூட்டுத்தாபனத்தால் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | 2018 பெப்ரவரி 15 ஆம் திகதிய இலக்கம் 01/2018 என்ற வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கை சுற்றறிக்கையின் 9.6 ஆம் பிரிவு | அரச உத்தியோகத்தர்களுக்கு தாம் புரிகின்ற பதவிகளின் பிரகாரம் வரிச்சலுகை வாகனங்களை பெற்றுக்கொள்வதற்கு வழங்கப்பட்டிருந்த விஷேட வரப்பிரசாரத்தின் அடிப்படையில் மோட்டார் வாகனங்கள் பெற்றுக்கொண்ட கூட்டுத்தாபனத்தின் 12 உத்தியோகத் தர்களுக்கு மோட்டார் வாகனங்களைப் பெற்றுக்கொள்வதற்கு வழங்கப்பட்ட வங்கிக் கடன் தொகையில் உரி வட்டியில் $^{2}/_{3}$ பகுதி அதாவது மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ரூபா 2.23 மில்லியன் திறைசேரி அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தினை அடிப்படையில் மாத்திரம் மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது. | கூட்டுத்தாபனத்தின் பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட கடன் தொகையின் வட்டியில் $^{2}/_{3}$ அளவு பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் கூட்டுத்தாபனத்தின் மூலம் மீளளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2022 அகஸ்ட் 07 ஆம் திகதிய இலக்கம் அமப/22/1069/604/006 என்ற அமைச்சரவைத் தீர்மானம் | 2021 இன் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 7 ஆவது பிரிவின் பிரகாரம் முன்னுரிமை அல்லாத அரச செலவினங்களை நிறுத்தி வைப்பதன் கீழ் மீளாய்வாண்டிற்காக பொதுத் திறைசேரியின் நிதி ஏற்பாட்டின் மூலம் | கூட்டுத்தாபனத்தின் விடயப் பரப்பிற்கு கொண்டுவரப்பட்ட வெள்ள நீர் கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் இந்த செலவினத் தலைப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டமைய | அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டு எல்லையின் கீழ் மற்றும் அமைச்சரவைத் தீர்மானத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் |

| | | |
|---|---|---|
| அமுல்படுத்தப்படுகின்ற செலவின விடய இலக்கம் 123-02-21-002-2506 இன் கீழ் வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டுத் தொகை ரூபா 1,000 மில்லியன் முதல் ரூபா 500 மில்லியன் வரை குறைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அந்த செலவின விடயத்தின் கீழ் செலவிடக் கூடிய ஆகக்கூடிய செலவினம் ரூபா 500 மில்லியன் ஆகும். அந்த 500 மில்லியன் தொகையில் 2021 ஆம் ஆண்டிற்காக செலுத்த வேண்டிய ரூபா 260.87 மில்லியன் குறைக்கப்பட்ட பின்னர் எஞ்சியிருந்த ரூபா 239.13 மில்லியன் ஆக இருந்த போதும் கூட்டுத்தாபனத்தால் அந்த செலவின விடயத்தின் கீழ் மீளாய்வாண்டிற்காக ரூபா 768.19 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அந்த செலவின விடயத்தின் கீழ் ரூபா 529.06 மில்லியன் திறைசேரி நிதி ஏற்பாட்டை விஞ்சி செலவிடப்பட்டிருந்தது. | ால் தேசிய தேவை யொன்றாக கருதி விஞ்சுகின்ற ரூபா 278.866 மில்லியன் உச்ச அளவின் கீழ் கூட்டுத்தாப னத்தால் அந்தக் கிரயத்தைச் செய்வதற்கு 2022 செப்டெம்பர் 28 ஆம் திகதி அனுப்பப்பட்ட HSB/5616 ஆம் இலக்க பணிப்பாளர் சபை பத்திரத்திற்காக 2022 செப்டெம்பர் 29 ஆம் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தின் போது அங்கீகாரம் கிடைத்திருந்தது. | வேண்டும். |

## 1.9 வரிப் பிரமாணங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஒக்டோபர் 18 ஆம் திகதி கூட்டுத்தாபனத்தால் தேறியிருந்த முதலீட்டு ஆதனங்களில் கிடைத்த வருமானம் ரூபா 96 மில்லியன் ஆக இருந்ததுடன் அதற்குரிய மூலதன இலாபம் பணிப்பிடப்பட்டு அதன் அடிப்படையில் செலுத்த வேண்டிய வரி, 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஒரு மாத்திற்குள் செலுத்துவதற்கும் மற்றும் அதற்குரிய அறிக்கை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டியிருந்த | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம். | உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

போதிலும் 2022 திசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு சொத்துக்கள் தேறி 02 மாதங்கள் கடந்திருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.10 தகவல் தொழில்நுட்ப (IT) பொது கட்டுப்பாட்டு திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பொதுவாக கணக்கீட்டு செயற்பாடுகளின் போது நிறுவனத்தால் ஆண்டிற்குரிய உழைக்கப்ப டுகின்ற வருமானம் மற்றும் செலவிடப்படுகின்ற செலவினங்கள் மீளாய்வாண்டிற்குரிய வருமானக் கூற்றில் சீராக்கப்பட்ட பின்னர் கிடைக்கின்ற தேறிய இலாபம் / நட்டம் நிறுத்தி வைத்தல் உழைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்ட பின்னர் உரிய வருமானம் / செலவினக் கணக்குகளில் வருமானம் பூச்சிய பெறுமதியாக்கப்படுகின்றது. எனினும் கூட்டுத்தாபனத்தின் புதிய கணக்கீட்டு மென்பொருள் தொகுதியில் வருமானக் கணக்குகள் 48 இற்குரிய செலவு மீதி மற்றும் வரவு மீதிகள் முறையே ரூபா 24,770.11 மில்லியன் மற்றும் 4.75 மில்லியன் ஆகவும், விற்பனைக் கிரயம் 09 கணக்குகளுக்குரிய ரூபா 11,306.03 மில்லியன் வரவு மீதியும், அவ்வாறே 133 செலவினக் கணக்குகளுக்கு உரிய வரவு மீதி மற்றும் செலவு மீதியிலும் முறையே ரூபா 11,680.32 மில்லியன் மற்றும் ரூபா 2,358.13 மில்லியனும் ஆரம்ப மீதியாக பேரேட்டில் காண்பிக்கப்பட்டிருந்தது. | உங்களின் அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம். | கூட்டுத்தாபனத்தின் கணக்கீட்டு மென்பொருளில் காணப்படுகின்ற பிரச்சினைகள் விரைவாக தீர்த்து வைக்கப்படல் வேண்டும். |
| (ஆ) பொதுவாக கணக்கீட்டு மென்பொருளின் மூலம் வருமானக் கூற்றில் உள்ளடக்கப்படுகின்ற விடயங்கள் மற்றும் நிதி நிலைமைக் கூற்றில் உள்ளக்கப்படுகின்ற விடயங்களை | உங்களின் அவதானிப்பு சரியானதாகும். கணக்கீட்டு மென்பொருளின் மூலம் அவ்வாறு | கூட்டுத்தாபனத்தின் கணக்கீட்டு மென்பொருளில் காணப்படுகின்ற பிரச்சினைகள் விரைவாக தீர்த்து |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளடக்கி தயாரிக்கப்படுகின்ற பரீட்சை மீதி ஒரே தடவையில் உருவாக்க் கூடியதாக இருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தால் பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு மென்பொருளின் மூலம் அது தனித்தனியாக 02 சந்தர்ப்பங்களின் போது உருவாக்கப்படுகின்றமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | பெறப்பட்ட பரீட்சை மீதியின் 02 அறிக்கைகள் சேர்க்கப்பட்டு தனி அறிக்கையொன்றாக கணக்காய்விற்கு வழங்கப்பட்டுள்ளது. | வைக்கப்படல் வேண்டும். |
| (இ) | நிலையான சொத்துப் பதிவேட்டின் பிரகாரம் கிரயம் ரூபா 8,092.30 மில்லியன் ஆன 10,608 சொத்து அலகுகள் அவதானிக்கப்பட்டதுடன் புதிய கணக்கீட்டு மென்பொருளின் மூலம் (SAP) இந்த ஒவ்வொரு சொத்து தொகுதிக்குமுரிய திரண்ட பெறுமதி மாத்திரம் பெறக்கூடியதாக இருந்ததுடன் ஒவ்வொரு சொத்துக்குமுரிய விரிவான தகவல்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய முறையில் புதிய கணக்கீட்டு மென்பொருள் அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம். | கூட்டுத்தாபனத்தின் கணக்கீட்டு மென்பொருளில் காணப்படுகின்ற பிரச்சினைகள் விரைவாக தீர்த்து வைக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்குரிய கூட்டுத்தாபனத்தின் வரிக்கு முன்னரான இலாபம் ரூபா 761 மில்லியன் ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வரிக்கு முன் இலாபம் ரூபா 1,263 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் வரிக்கு முன் இலாபத்தில் ரூபா 502 மில்லியன் வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு மீளாய்வாண்டின் திறைசேரி நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் அமுல்படுத்தப்படுகின்ற செயற்திட்ட வருமானம், சேவை பங்களிப்பு செயற்திட்ட வருமானம் மற்றும் மணல் விற்பனையால் கிடைத்த வருமானம் போன்ற வருமானங்கள் ரூபா 2,663 மில்லியனால் குறைவடைந்ததைப் போன்று பிணக்குகள் தீர்க்கும் வழக்கின் பிரகாரம் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்த ரூபா 753 மில்லியன் இழப்பீட்டுத் தொகையும் காரணமாக இருந்தது.
எனினும் மீளாய்வாண்டில் நிலையான வைப்பின் அடிப்படையில் கிடைத்த வட்டி வருமானம் ரூபா 816 மில்லியனாலும், நாணய மாற்று இலாபம் ரூபா 296 மில்லியனாலும், காணி மற்றும் கட்டிடம் வாடகைக்கு வழங்கியதால் கிடைத்த வருமானம் ரூபா 164 மில்லியனாலும் அதிகரித் திருந்ததுடன் காணி விற்பனையிலிருந்து ரூபா 96 மில்லியன் உழைக்கப்பட்டமையினால் இலாபத்தில் ஏற்பட்டிருந்த வீழ்ச்சி குறைவடைந்திருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் முக்கிய பகுப்பாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரிய நிறுவனத்தின் நிதி விளைவுகளை மதிப்பீடு செய்த போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| ஆண்டு | 2022 | 2021 |
|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| புரள்வு | 3,542 | 4,441 |
| அரசாங்க பங்களிப்பு மற்றும் ஏனையவை | 748 | 2,352 |
| | 4,290 | 6,793 |
| நேர் செலவினம் | 2,397 | 4,131 |
| மொத்த இலாபம் | 1,893 | 2,662 |
| வரிக்கு முன்னர் இலாபம் / (நட்டம்) | 761 | 1,263 |

(அ) நிதி வருமானம் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது 223 சதவீதத்தினால் உயர்வடைந்திருந்ததுடன் இதற்காக நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 201.56 மில்லியன் முதல் ரூபா 1,017.57 மில்லியன் வரை 405 சதவீதத்தால் உயர் வடைந்து சென்றமை பிரதான காரணமாக இருந்தது. அவ்வாறே கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது முதிர்ச்சியடைகின்ற நிதிச் சொத்துக்கள் 85 சதவீதத்தினால் அதிகரித்தித்திருந்ததுடன் மீளாய்வாண்டின் போது நிலையான வைப்பு முதலீடு ரூபா 3,680 மில்லியன் முதல் ரூபா 6,810 மில்லியன் வரை ரூபா 3,130 மில்லியனால் அதிகரித்திருந்ததுடன் இந்த நிலையான வைப்பு பெறுமதியில் அதிகரித்த அளவு கூட்டுத்தாப னத்தின் சேவை பங்களிப்பாளர்களிடமிருந்து பெறப்பட்ட காலரீதியில் தீர்த்துவைக்கப்படாத வைப்புக்களை பயன்படுத்தி முதலீடு செய்யப்பட்டிருந்தது.

## 2.3 விகிகதாசாரப் பகுப்பாய்வு

(அ) கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது மொத்த இலாப விகிதம் 39.18 சதவீதத்தில் இருந்து 44.13 சதவீதம் வரை அதிகரித்திருந்தது. இதற்காக பிரதான காரணமாக காணி விற்பனையில் இருந்து கிடைத்த வருமானம் ரூபா 96 மில்லியனால் அதிகரித்திருந்தமை காரணமாகும்.

(ஆ) கடந்த ஆண்டில் 15.06 சதவீதமாகக் காணப்பட்ட தேறிய இலாப விகிதம் மீளாய்வாண்டின் போது 6.3 சதவீதம் வரை வீழ்ச்சியடைந்திருந்ததுடன் இதற்காக பிரதானமாக பிணக்குகள் தீர்க்கும் வழக்கின் தீர்ப்பின் பிரகாரம் செலுத்துவதற்கு ஏற்பட்ட ரூபா 753 மில்லியன் இழப்பீட்டுத் தொகை காரணமாக இருந்தது.

(இ) கடந்த ஆண்டின் போது 2.29:1 ஆகக் காணப்பட்ட நடைமுறை விகிதம் மீளாய்வாண்டின் போது 0.24 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்ததுடன் அதற்காக வியாபரம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் ரூபா 1,564 மில்லியனால் அதிகரித்தமை காரணமாக இருந்தது. அவ்வாறே விரைவு விகிதமும் மீளாய்வாண்டின் போது 1.85:1 முதல் 1.69:1 வரை குறைவடைந்திருந்தது.

(ஈ) தேர்வு விகிதம் 18.12 சதவீதம் முதல் 15.08 வரை குறைவடைந்திருந்ததுடன் வட்டி செலுத்துகின்ற கடன் பெறுமதி ரூபா 266.9 மில்லியனால் குறைவடைந்தமை இதற்கான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கூட்டுததாபனத்தால் 2019 நவம்பர் 04 ஆம் திகதி ரூபா 05 மில்லியன் முதலீடு செய்யப்பட்டு Waste 2 | அடுத்தடுத்து ஏற்பட்ட கொள்கை ரீதியான தீர்மான மாற்றங்களின் | புதிய செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன் சாத்தியவள |

| | | | |
|---|---|---|---|
| | Wealth (Pvt) Ltd என்ற பெயரில் புதிய துணைக் கம்பனியொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எனினும் கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகள் கைவிடப்பட்டதுடன் கூட்டுத்தாபனத்திற்கு அறவிட வேண்டியிருந்த ரூபா 2.46 மில்லியன் தொகையை அறவிடுதல் நிச்சயமற்ற நிலையில் காணப்பட்டது. | அடிப்படையில் இந்தக் கம்பனியை முன்கொண்டு எதிர்காலத்தில் நடாத்திச் செல்லும் தேவை யொன்று காணப்படாமையினால் அந்த சந்தர்ப்பம் வரையில் Waste 2 Wealth (Pvt) Ltd Ltd கம்பனிக்கு சொந்தமாகக் காணப்பட்ட தொகை கூட்டுத்தாபனத்திற்கு அறவிடப்பட்டுள்ளது. மிகுதி தொகை கம்பனியால் செலவிடப்பட்டமையால் மீள அறவிட முடியாதிருந்தது. | அய்வு மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | ஹொரணை பேரூந்து நிலையத்தில் இரண்டாவது கட்டத்தை நிர்மாணிப்பதற்குரிய கூட்டுத்தாபனத்திற்கு 2015 பெப்ரவரி 17 ஆம் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டிய ரூபா 5.53 மில்லியன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் நகர அபிவிருத்தி அதிகார சபையிலிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டம் இடை நடுவில் நிறுத்தப்பட்டதன் காரணமாக கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 12.35 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்ததாக கூட்டுத்தாபனத்தினால் தயாரிக்கப்பட்ட கிரய அறிக்கையின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. | அறவிட வேண்டிய பணம் பட்டியல் மற்றும் அறவிடலாக (Claims) 2015 ஆகஸ்ட் 24 ஆம் திகதிய இறுதி பட்டியல் மூலம் சமர்ப்பிக் கப்பட்ட போதும் இதுவரையிலும் நகர அபிவிருத்தி அதிகார சபையால் தேவையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல்களை தீர்த்துவைக்காமைக்கான காரணங்களை கண்டறிந்து அந்தப் பணத்தை அறவிடுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | கூட்டுத்தாபனத்தால் 2020 ஆம் ஆண்டு முதல் அமுல்படுத்தப்பட்ட கிரிமண்டல மாவத்தையின் விவசாய அபிவிருத்தி செயற்திட்டம் 2021 ஆம் ஆண்டு மற்றும் மீளாய்வாண்டின் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட நட்டம் முறையே ரூபா 6.81 மில்லியன் மற்றும் ரூபா 8.5 மில்லியன் ஆக இருந்ததுடன் செயற்திட்டத்திற்காக | ஆரம்பத்தின் போது நிலத்தைப் பயிரிடும் நடவடிக்கை களுக்காக பொருத்தமான வகையில் தயாரிப்பதற்காக கவனத்திற்கொள்ளக் கூடிய ஊழியர் தரப்பொன்று | புதிய செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் அதன் சாத்தியவள ஆய்வொன்று மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கூட்டுத்தாபனம் செலவிட்ட மொத்தக் கிரயம் ரூபா 22.08 மில்லியன் ஆகும். 2021 ஆம் ஆண்டில் ரூபா 10.71 மில்லியன் அதாவது 99.63 சதவீதம் ஊழியர் கிரயம் ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் ஊழியர் கிரயம் ரூபா 9.18 மில்லியன் அதாவது 81.02 சதவீதம் ஆகும். | சேவையில் ஈடுபடுத்த வேண்டி ஏற்பட்டமையால் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது கவனத்திற் கொள்ளக்கூடிய கிரயம் ஒன்றை செலவிட வேண்டி ஏற்பட்டிருந்தது. | |
| (ஈ) | களனி வெதமுல்லயில் அமைந்துள்ள காணி கூட்டுத்தாபனத்தால் 50 வருட காலத்திற்காக வாடகைக்கு வழங்குவதற்கு 1995 ஆம் ஆண்டின் போது மதிப்பீடு செய்யப்பட்ட வாடகைப் பெறுமதி ரூபா 35.5 மில்லியன் ஆக இருந்தது. எனினும் பின்னர் வரி காலப் பகுதி 99 வருடங்கள் வரை நீடிக்கப்பட்டிருந்த போதிலும் வரிப் பெறுமதி மாற்றப்படாதிருந்ததுடன் கூட்டுத்தாபனத்தால் முன்னைய மதிப்பீட்டுப் பெறுமதியில் ரூபா 0.25 மில்லியன் மாத்திரம் சேர்க்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக இந்தக் காணிக்காக அறவிடப்படுகின்ற வருடாந்த வாடகை குறைக் கணிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | தனியார் நிறுவனம் ஒன்றிற்கு வழங்கப்பட்டிருந்த களனி, வெதமுல்ல காணிக்காக 1995 திசம்பர் 04 ஆம் திகதிய மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் 50 வருட காலப்பகுதிக்காக வழங்கப்பட்டிருந்த மதிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட தொகையை விட 1996 ஒக்டோபர் 20 ஆம் திகதிய மதிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட தொகை குறைவாக இருந்தமையால் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் அதிகரித்த தொகையொன்று அறிக்கையிடப்பட்டுள்ள மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் ரூபா 35.5 மில்லியன் தொகையில் 99 வருடம் வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளது. | காணிக்காக அறவிடப்படுகின்ற வருடாந்த வாடகை சரியாக காலரீதியில் மதிப்பீடு செய்யப்படல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 1981 ஆம் ஆண்டு முதல் 2005 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் கூட்டுத்தாபனத்தால் கையேற்கப்பட்ட காணிகளுக்குரிய இழப்பீட்டு பணம் செலுத்தும் நடவடிக்கைகள் தாமதம் அடைந்ததன் காரணமாக அந்தக் காணிக்காக மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய இழப்பீட்டுத் தொகை ரூபா 122.43 மில்லியன் ஆக இருந்ததுடன் அதற்குரியதாக செலுத்த வேண்டிய வட்டி ரூபா 118.53 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்த வேண்டிய வட்டி கடந்த ஆண்டினை விட ரூபா 5.89 மில்லியனால் அதிகரித்திருந்தது. அவ்வாறே காணி கையேற்பதற்காக 14 வருடங்கள் முதல் 40 வருடங்கள் வரையிலான கால வீச்சினை எடுத்தமையின் காரணமாக காணியில் அனுமதி யற்ற குடியிருப்பாளர்கள் குடியிருந்தமை மேலும் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | இழப்பீடு செலுத்தும் பணிகள் உரிய பிரதேச செயலகத்தினாலே மேற்கொள்ளப்படுகின்றது. கைப்பற்றல் நடவடிக்கைகள் தொடர்பாக விடய அறிவுடைய உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை, உத்தியோகத்தர்கள் தொடர்ச்சியாக இடமாற்றம் பெற்றமை, மதிப்பீட்டு அறிக்கை தாமதம், நில அளவையாளர் திணைக்களத்தின் திட்டங்கள் தயாரிக்கும் போது ஏற்படுகின்ற தாமதம் அந்தக் காணிகளின் உரிமையாளர்களை உறுதிப்படுத்தாத சந்தர்ப்பங்களின் போது கௌர நீதிமன்றத்திற்கு அனுப்புதல் மற்றும் பல்வேறு நீதிமன்ற நடவடிக்கைகள், இழப்பீடு போதியளவில் இல்லாமையின் காரணமாக இழப்பீடை மீளாய்வு செய்யும் சபைக்கு சமர்ப்பித்தல் மற்றும் அதன் தீர்மானத்தை எடுக்கும் போது ஏற்படுகின்ற தாமதம் போன்ற அநேகமான விடயங்கள் கைப்பெற்றும் நடவடிக்கைகளில் தாக்கமளித்திருந்தது. | காணிகளுக்குரிய இழப்பீட்டுத் தொகையை காலரீதியில் தீர்த்து இழப்பீட்டு வட்டியை குறைக்க வேண்டியிருந்ததுடன் அனுமதியற்ற குடியிருப்பாளர்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான முத்துராஜவெலயில் அமைந்துள்ள 22 ஏக்கர் 02 றூட் மற்றும் 37.14 பேர்ச் அளவான நிலப்பகுதி மற்றும் 55900 சதுர அடி அளவான கட்டிடம் என்பன ரூபா 2,195.79 மில்லியன் தொகையில் ஆன வாடகைத் தொகையில் தனியார் கம்பனிக்கு 50 வருட நீண்ட கால வாடகை அடிப்படையில் வழங்குவதற்கு 2021 யூன் 02 ஆம் திகதி புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதுடன் அதற்காக முற்பணமாக ரூபா 500 மில்லியன் பெறப்பட்டிருந்த போதும் மிகுதித் தொகையான ரூபா 1,695.79 மில்லியன் தொகையை பெற்றுக்கொள்வதற்கும் மற்றும் வாடகை உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு 2023 நவம்பர் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணப்படுகின்ற பொருளாதார நெருக்கடிகளின் இடையே காணியின் மொத்த பெறுமதியையும் ஒரே தடவையில் செலுத்துதல் வசதியீனமாக இருந்தமையால் தவணையாக செலுத்துவதற்கு அனுமதி கோரப் பட்டதுடன் அதன் பிரகாரம் காணப்படுகின்ற வங்கி வட்டி விகிதத்தின் அடிப்படையில் வட்டியை அறவிட்டு தவணையாக செலுத்துவதற்கு தற்போது பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் பிரகாரம் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | முறையான வாடகை உடன்படிக் கையில் கைச்சாத்திட வேண்டியிருந்ததுடன் வாடகைப் பணத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | கூட்டுத்தாபனத்தின் சதுப்பு நில முகாமைத்துவப் பிரிவினால் அமுல்படுத்தப்பட்ட முத்துராஜவெல கழிவுப் பொருள் முகாமைத்துவ பூங்காவில் கூட்டுப் பசளை உற்பத்தி நிலையம் ஒன்றை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் கீழ் உத்தேசிக்கப்பட்ட கூட்டுப்பசளை உற்பத்தி தொழிற்சாலைக்காக கட்டிட இலக்கம் 03 நிர்மாணிக்கும் நடவடிக் கைகளில் தூண்களின் வேலை மாத்திரம் மேற்கொள்ளப்பட்டதுடன் அதற்காக ரூபா 75.80 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.<br>மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த நிர்மாணங்களுக்காக 04 வருடங்கள் கடந்திருந்த போதிலும் | நிதி அமைச்சினால் அரச செலவினங்களைக் கட்டுப்படுத்தும் நோக்காகக் கொண்டு விநியோகிக்கப்பட்ட சுற்றறிக்கைகளுக்கு இணங்க இரு தரப்பினரதும் இணக்கப்பாட்டின் அடிப்படையில் இந்த ஒப்பந்தத்தின் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டிருந்தது. | திட்டங்களுடன் செயற்திட்டங்களை ஆரம்பித்து குறித்துரைத்த காலத்தில் பூர்த்தி செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மிகுதி நிர்மாணங்கள் 2023 நவம்பர் வரையிலும் திட்டமிடப்பட்ட பிரகாரம் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | ரூபா 400 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்ட முதலீடொன்றையுடைய 2018 செப்டெம்பர் 22 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2019 ஆம் ஆண்டின் இறுதியில் வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட பிரதான அலுவலக வளவில் 07 மாடிகளை உடைய புதிய கட்டிடமொன்றின் நிர்மாணம் (பைலின்) பணிகளுக்காக ரூபா 10.27 மில்லியன் செலவிடப்பட்ட பின்னர் தெரிவு செய்யப் பட்ட ஒப்பந்தகாரரின் நலிவான நிதி வலுவின் அடிப்படையில் செயற்திறன் இன்மையின் காரணமாகவும் ஒப்பந்தம் 2019 ஏப்ரல் 03 ஆந் திகதி கூட்டுத்தாபனத்தால் ஒப்பந்த நடவடிக்கை கள் கைவிடப்பட்டதுடன் அதற்காக பொருத்தமான ஒப்பந்தகாரர் ஒருவரை தெரிவு செய்து கொள்வதற்கு 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் கூட்டுத்தாபனம் தவறியிருந்தது. | தற்போது கூட்டுத்தாபனத்தின் நிதி சக்தியைக் கவனத்திற்கொண்டு மற்றும் அரசாங்கத்தின் சுற்றறிக்கைகளுக்கு இணங்க உரிய நிர்மாண நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள் ளது. | நிர்மாணங்களை விரைவாக மேற்கொண்டு எதிர் பார்க்கப்பட்ட நலன்களை பெற்றுக்கொள்ளல் வேண்டும். |
| (உ) | உடன்படிக்கையின்றி நகர அபிவிருத்தி அதிகார சபைக்குரிய ஹிம்புலாவெலவில் அமைந்துள்ள காணி ஒன்ற கூட்டுத்தாபனத்தால் சிற்றுண்டிச்சாலை நிர்மாணிக்கப்பட்டதுடன் அது வாடகை அடிப்படையில் தனியார் கம்பனிக்கு 2017 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்தது. எனினும் அந்த சிற்றுண்டிச்சாலை அமைந்துள்ள காணி பிரதேசம் நகர அபிவிருத்தி அதிகார சபைக்குரிய காணியாக இருந்தமையால் சிற்றுண்டிச்சாலை கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாக இருந்த போதும் காணியின் உரித்து இல்லாமையினால் ரூபா 24.58 மில்லியன் ஆன வாடகைப் | உரிய காணியைக் கையேற்பதற்கோ அல்லது செலவினங்களைத் தீர்த்துவைப்பதற்கோ தேவையான நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ளுமாறு உரிய உத்தியோகத்தர்களு க்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | காணியினை கையேற்பதற்கும் மற்றும் நிலுவை வாடகைப் பணத்தை அறவிடுவதற்காகவு ம் விரைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பணத்தை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கூட்டுத்தாபனத்திற்கு முடியாதிருந்தது. | | |
| (ஊ) | நிதிநிலைமைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் குறிப்பு இலக்கம் 14 (நியதிச் சட்டப் பொறுப்புக்கள்) இன் பிரகாரம் 2022 திசம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய முத்திரை வரி ரூபா 7.78 மில்லியன் ஆக காணப்பட்டதுடன் அதில் காணி கையளிப்பதற்குரியதாக செலுத்த வேண்டிய முத்திரைக் கட்டண வரி ரூபா 7.7 மில்லியன் ஆகும். அதற்குரிய காலப் பகுப்பாய்வைப் பரிசோதனை செய்த போது செலுத்த வேண்டிய முத்திரை வரித் தொகையில் 93 சதவீதம் இரண்டு வருடங்களை விஞ்சியிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் நீண்ட காலமாக இந்த முத்திரை வரி செலுத்தாமை பிரச்சினையாக இருந்ததுடன் உரிய காணியைக் கையளித்தல் முடிவுறுத்தி உடனடியாக குறித்துரைத்த பிரகாரம் முத்திரைக் கட்டணத்தைச் செலுத்தி காணியினை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை இதற்கான காரணமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | இந்த காணி சட்ட ரீதியான உரித்துறுதியின் மூலம் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு கையளித்தவுடன் இந்த முத்திரை வரித்தொகையை செலத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அவ்வாறே இதற்கு மேலதிகமாவுள்ள ஏனைய விடயங்களுக்குமுரிய முத்திரை வரி தொகையும் உரிய காணி கையளிக்கும் போதும் அல்லது வாடகை உடபடிக்கை கைச்சாத்திடும் சந்தர்ப்பத்தின் போதும் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குத்தகை வாடகை உடன்படிக்கை அல்லது காணி கையளித்தலை விரைவாக மேற்கொண்டு உரிய முத்திரை வரியைச் செலுத்தி தீர்த்துவைத்தல் வேண்டும். |
| (எ) | நிர்மாணக் கைத்தொழிலுக்காக மணல் வழங்குவதற்காக கரையோரப் பகுதியில் அமைந்துள்ள கடல் மணல் ஒரு கன மீற்றர் ரூபா 4 மில்லியன் அகழ்தல் மற்றும் பம்பி இடுவதற்காக கூட்டுத்தாபனம் 2018 ஆம் ஆண்டின் போது வெளிநாட்டு தனியார் கம்பனியொன்றுடன் ஒப்பந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்தது. எனினும் உடன்படிக்கை செய்யப்பட்ட விடயப் பரப்பை பூர்த்தி செய்து கொள்வதற்கு முன்னர் நியாயமான காரணமின்றி உயர் முகாமைத்து வத்தால் தமது விருப்பத்தின் | சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனையின் பிரகாரம் இதில் குறிப்பிடப்பட்ட கூட்டுத்தாபனத்திற்கு ச் சொந்தமான நில மீட்டல்களுக்காக போதியளவான சதுப்பு நிலம் காணப்படாமை என்பதனால் இந்த ஒப்பந்தத்தை முடிவுறுத்துவதன் காரணமாக கொள்ளமுடியாதிருந் | பொறுப்வாய்ந்த தரப்பினரை இனங்கண்டு ஒழுக்காற்று விசாரணைகள் மேற்கொண்டு இழப்பீட்டுத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

பிரகாரம் 2020 ஏப்ரல் 10 ஆம் திகதி செயற்திட்டம் கைவிடப் பட்டிருந்தது. அதன் போது உடன்படிக்கை மீறியதன் காரணமாக கூட்டுத்தாபனத்திற்கு செலவிட வேண்டி ஏற்பட்டிருந்த நிதி நட்டம் தொடர்பாக கவனத்திற் கொள்ளப்பட்டிருக்க வில்லை. செயற்திட்டத்திற்காக செலவாகின்ற மேலதிக கிரயம், ஒப்பந்தகாரரால் நிறைவேற் றப்பட வேண்டிய பணிகள் தொடர்பாக உடன்படிக்கை நிபந்தனையின் படி ஒப்பந்தகாரர் உரிய பிரகாரம் ஆலோசானை வழங்காமை, ஒப்பந்தகாரருடன் காணப்பட்ட எழுத்து மூல உடன்படிக்கையை முடிவுறுத்துவதற்கு முன்னர் ஒப்பந்தகாரர் ஏனைய செயற்திட்டத்திற்கு விடுவித்தல் போன்ற விடயங்கள் தொடர்பில் கூட்டுத்தாபனம் கவனம் செலுத்தாமை கணக்காய்வின் போது பிரச்சினைக்குரியதாக இருந்தது. இது தொடர்பாக பாதிப்பிற்கு உட்பட்ட தரப்பினரால் பிணக்குகள் தீர்க்கும் சபைக்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் அந்த தீர்ப்பின் மூலம் உரிய வெளிநாட்டு கம்பனிக்கு ஐ.அ.டொலர் 2,073,976 (ரூபா 753.08 மில்லியன் தொகை- அத்திகதியில் காணப்பட்ட அந்நியச் செலாவணி நாணய மாற்று விகிதத்தின் பிரகாரம்) இழப்பீடாக செலுத்துவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கூட்டுத்தாபனத்தால் 2022 இன் நிதிக் கூற்றுக்களில் மொத்தத் தொகையும் செலுத்த வேண்டிய இழப்பீடாக இனங்காணப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக கூட்டுத்தாபனத்தால் ஒப்பந்தகாரருக்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்ட வருமான வரித் தொகை ஐ.அ.டொலர் 181,484.21 (ரூபா 60.2 மில்லியன்) குறைத்து கழிக்கப்பட்டதன் பின்னர் ஒப்பந்தகாரருக்கு செலுத்த வேண்டிய இழப்பீட்டுத் தொகை

தமை காண்பிக்கப்பட்டிருக் கும் போது இதற்குரிய கடிதங்களில் குறிப்பிடப்பட்ட ஏனைய விடயங்களின் அடிப்படை இந்த ஒப்பந்தம் முடிவுறுத்த முடியும் என ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனையின் அடிப்படையில் அவர்களின் அவதானிப்புக்களில் கீழே குறிப்பிடப்படுகின்ற பிரகாரம் 2020 ஏப்ரல் 10 ஆம் திகதிய இலக்கம் PBD/38A என்ற கடிதம் மூலம் ஒப்பந்தம் முடிவுறுத்தப்படுவதா கவும் ஒப்பந்தகாரருக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. 2019 மார்ச் 05 ஆந் திகதிய இரு தரப்பினருக்கும் இடையே ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட மேலதிக உடன்படிக்கையில் குறிப்பிடப் பட்ட பிரிவுகளின் பிரகாரம் இந்த ஒப்பந்தகாரர் கப்பலின் பராமரிப்பு நடவடிக்கைகளுக்கா க 2019 மார்ச் 20 ஆந் திகதி மணல் அகழ்வு மற்றும் பம்பியிடல் தற்காலிகமாக

மற்றும் இறுதிப் பட்டியலுக்குரிய ஐ.அ.டொலர் 4,035,777.18 (ரூபா 1,338.87 மில்லியன்) 2023 நவம்பர் மாதத்தின் போது ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. இவ்வாறே கணிசமான இழப்பீட்டுத் தொகை செலுத்த வேண்டி ஏற்பட்டமை கூட்டுத்தாபனத்தின் திரவத் தன்மையில் பாதகமாக தாக்கமளித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. எனினும் கூட்டுத்தாபன உத்தியோகத்தர்களின் கவனமின்மையாக செயற்பட்டதன் காரணமாக கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை நிபந்தனையின் பிரகாரம் இந்த இழப்பீட்டுத் தொகை செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்த போதும் இதற்காக பொறுப்புவாய்ந்த தரப்பினரை இனங்கண்டு ஒழுக்காற்று விசாரணை நடாத்தப்பட்டிருக்கவில்லை.

நிறுத்தப்பட்டிருந்தது. 2019 நவம்பர் 19 ஆந் திகதி செயற்திட்ட நடவடிக்கைகளை மீண்டும் மேற்கொண்டு செல்வதற்காக மேலதிக உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட பிரிவிற்கு இணங்கும் வகையில் கூட்டுத்தாபன தரப்பினர் ஒப்பந்தகாரருக்கு ஒப்பந்த நிலத்தை குறித்துரைத்த பிரகாரம் வழங்கியிருந்தனர். கூட்டுத்தாபன தரப்பினர் சமர்ப்பித்த முன்மொழிவுகளுடன் இணைத்து சமர்ப்பிக்கப்பட்ட SOD-R15 என்ற இணைப்பு மூலம் உரிய சான்றுகள் பிணக்குகள் தீர்க்கும் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2018 ஏப்ரல் 13 ஆம் திகதி அனுப்பப்பட்டு இலத்திரனியல் தபால் அறிவித்தலின் மூலம் 2019 மார்ச் 05 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட மேலதிக உடன்படிக்கையின் 3.6.3 நிபந்தனையின் பிரகாரம் மீனவர்களுக்கு இழப்பீடு செலுத்துதல் கூட்டுத்தாபனத்தின் பொறுப்பாக இல்லாதிருந்தமை குறிப்பிடப்பட்டுள்ளது. பிணக்குகள் தீர்க்கும்

| | | | |
|---|---|---|---|
| | | தீர்ப்பின் கட்டளையின்படி ஒப்பந்தகாரருக்கு செலுத்த வேண்டிய சகல பெறுமதிகளும் (சட்ட ரீதியான வட்டி தவிர) இதுவரையில் செலுத்தி முடிவுறுத்தப்பட்டுள்ளது. மணல் விற்பனையால் உழைக்கப்பட்ட வருமானம் நிலையான வைப்பில் இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டமையால் அதில் வட்டியொன்று உழைக்கப்படுள்ளமையால் இந்த செலுத்தப்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகையின் காரணமாக கூட்டுத்தாபனத்தின் திரவத்தன்மை பாதகமாக தாக்கமளிக்காதிருந்தமையை அறியத்தருகின்றோம். | |
| (ஏ) | கொள்ளுப்பிட்டி 22 ஆவது ஒழுங்கையில் அமைந்துள்ள காணி ஒன்று 30 வருடங்களுக்கு வாடகை அடிப்படையில் சசக்காவா ஞாபகார்த்த இலங்கை மற்றும் ஜப்பான் கலாசார நிலையத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன், அந்த வாடகை காலம் 2017 யூன் 30 ஆம் திகதியில் முடிவடைந்திருந்தது. அந்த வாடகை உடன்படிக்கையை நீடிப்பதற்காக கூட்டுத்தாபனத்தால் 2017 யூலை 21 ஆம் திகதி அரசாங்கத்தின் பிரதான மதிப்பீட்டாளரிடமிருந்து பெறப்பட்ட புதிய மதிப்பீட்டு அறிக்கையின்படி, 30 வருட வாடகை அடிப்படையில் அறவிடப்பட வேண்டிய வருடாந்த | இந்த வாடகைக்கு வழங்குவதற்குரிய. இராஜதந்திர தொடர்பு மற்றும் கலாசார கடப்பாடுகளை கவனத்தில் கொண்டு கூட்டுத்தாபனம் பணிப்பாளர் சபையினால் எடுக்கப்பட்ட கொள்கை ரீதியான தீர்மானத்தின் அடிப்படையில் 2017 யூலை 01 ஆம் திகதி முதல் வருடாந்தம் 10 சதவீத | இந்த காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக உடன்படிக்கையில் கைச்சாத்திடவேண்டி இருந்ததுடன் குறித்துரைத்த வாடகைப் பணம் அறவிடப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| வாடகை ரூபா 12.68 மில்லியன் ஆக இருந்தது. எனினும் சசக்காவா நம்பிக்கை பொறுப்பினால் அந்த வாடகை தொகை செலுத்துவதற்கு வசதியனமாக இருந்ததாக காண்பித்து முறைப்பாடு ஒன்று சமர்ப்பிக்கப்பட்டு இருந்ததுடன், அதன் பிரகாரம் பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் வருடாந்த வாடகை ரூபா 1.59 மில்லியன் வரை குறைக்கப்பட்டிருந்தது. இந்த குறைப்பின் காரணமாக வருடாந்தம் ரூபா 11.09 மில்லியன் வாடகை வருமானம் கூட்டுத்தாபனத்திற்கு இழக்கபட்டு இருந்தமை கணக்காய்வில் அவதானிக்கபட்டது. அவ்வாறே 2020 ஆகஸ்ட் 30 ஆம் திகதியல்ல HSB/5579 என்ற பணிப்பாளர் சபை பத்திரத்தின் மூலம் வாடகை உடன்படிக்கை. 2024 வரை வாடகை பணம் 10 சதவீதம் அதிகரித்தலுடன் நீடிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் கணக்காய்வு தேதியான 2023 நவம்பர் 24 ஆம் திகதி கூட்டுத்தாபனம் மற்றும் சசக்காவா நம்பிக்கை பொறுப்புக்கிடையே இந்த காணி மற்றும் கட்டிடம் தொடர்பாக எந்தவொரு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வில்லை. | அதிகரிப்புடன். இது வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த கூட்டுத்தாபனத்தின் சட்ட பிரிவினால் வாடகை உடன்படிக்கையின் வரைவு தயாரிக்கப்பட்டு அனுப்பப்பட்ட போதும், சசகாவா மன்றத்தால் அவர்களின் பணிப்பாளர் சபை அங்கீகாரம் தாமதம் அடைந்ததன் காரணமாக உடன்படிக்கை செய்வதற்கு முடியாதிருந்தது. எனினும் எதிர்காலத்தில் வருடாந்த வாடகை பணத்தை அறவிட்ட பின்னர் உரிய வாடகை உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | களனி, பியகம, வத்தளை மற்றும் பேலியகொடை பிரதேச செயலக பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்ட. நீர் வழிந்தோடும் போது அப்பிரதேசங்களில் குடியிருந்த 155,000 எண்ணிக்கையிலான மக்களுக்கு மற்றும் கைத்தொழில்சார் தொழிற்சாலைகளுக்கும் ஏற்படுகின்ற பாதுகாப்பு மற்றும் சுற்றாடல், சமூக இழப்புக்களை | உத்தேச ஒலியமுல்ல பம்பிக் கூடத்தை நிர்மாணிக்காமல் உரிய காணி அபிவிருத்தி. செய்யப்பட்ட போதும் அருகிலுள்ள பிரதேசத்தில் நீர் வழிந்தோடும் நிலமைக்கு உட்பட்டு முற்படக் கூடியதாக இருந்தமை இனங்காணப்பட்டிருந்ததுடன் அந்த பம்பிக் கூடம் | இரண்டு பம்பிக் கூடங்களின் நிர்மாணங்களை விரைவாக பூர்த்தி செய்து எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

குறைக்கும் நோக்கில் செயற்திட்ட கிரயம் ரூபா 3,000 மில்லியன் ஆன முதுன் எல அபிவிருத்தி செயற்திட்டம் திறைசேரி நிதி ஏற்பாட்டின் கீழ் 2021 ஆண்டில் இறுதி அளவில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்த்து 2016 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கபட்டிருந்தது. எனினும் செயற்திட்ட நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு முடியாமையினானால் அந்த காலம் 2025 டிசம்பர் 31 வரை காலம் நீடிக்கபட்டிருந்தது. மீளாய்வு ஆண்டின் இறுதிவரையில் அதன் நிதி மற்றும் நிதிசார் மற்றும் பௌதீக செயல் முன்னேற்றம் முறையே 68.05 மற்றும் 68.5 சதவீதமாக இருந்தது.

இந்த செயற்திட்டத்தின் கீழ் தீர்மானிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்ட ஒளியமுள்ள 02 நீர் பம்பி கூடம் 2020 ஆம் ஆண்டின் இறுதிவரையில் பூர்த்தி செய்யும் எதிர்பார்ப்பில் கட்டம் I மற்றும் II ஆக நிர்மாணிப்பதற்கு உத்தேசப்பட்டிருந்ததுடன் கட்டம் II பம்பிக்கூடம். நிர்மாண நடவடிக்கைகள் 2018 மார்ச் 26 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டின் இறுதிவரையில் அந்த நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாமையின் காரணமாக 2018 ஆகஸ்ட் 20 திகதி ரூபா 83.40 மில்லியனுக்கு கொள்வனவு செய்யப்பட்ட 5M$^3$/S இரண்டு நீர்பம்பிகள் கொள்வனவு செய்து 05 வருடங்கள் கடந்து இருந்த போதிலும் பயனற்று காணப்பட்டது.

நிர்மாணிக்கப்பட்ட பின்னர் முதுன்எலயில் அமைந்துள்ள மிகுதி காணி பகுதியை அபிவிருத்தி செய்ய கூடியதாக இருக்கும் என அறிவிக்கபட்டுள்ளது.

ஒலியமுல்ல நீர் பம்பிங் கூடம். கட்டம் I இதற்காக தேவையான நிதி ஏற்பாடு பொது திறைசேரியின் மூலம் கிடைக்காமையினால் அதன் செயற்பாடுகளை கைவிடப்பட்டிருந்ததுடன், கட்டம் II இன் நிர்மாண நடவடிக்கைகள் மாத்திரம் மேற்கொள்ளப்படுகின்றது. இரண்டாயிரத்து 2022 ஆம் ஆண்டின் டிசம்பர் முதல் நீர் பம்பிக் கூடம் நீர் பம்பல் பொருத்துவதற்கு தேவையான சகல வசதிகளும் வழங்கப்பட்டிருந்தபோதும், ஒப்பந்தத்தின் பிரகாரம் கொடுப்பனவுகள் தொடர்பான பிரச்சினைகளின் காரணமாக ஒப்பந்தகாரர் பாம் கம்பியை பொருத்துதல் நிராகரித்து இருந்ததுடன் அது வரையில் பிணக்குகள் தீர்ப்பதற்காக அனுப்பபட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 1968 இன் 18 இலக்க இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபன சட்டத்தின் | தற்போது 07 மாகாணங்களில் அமைந்துள்ள. சதுப்பு | விடயம் இடப்பட்ட காணிகளை இனங்கண்டு |

2(ஆ)1 பிரிவின் பிரகாரம் நாடு முழுவதும் மாகாண மட்டத்தில் அமைந்துள்ள. புரண் சதுப்பு நிலங்கள், சேற்றுடன் அல்லது களிவுடன் உடனான காணிகள் இனங்காணப்பட்டு அனுமதியற்ற நில மீட்டல்களை கட்டுப்படுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்வதற்கு முடியுமான வகையில் அவற்றை வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பகிரங்க படுத்துவதற்கு கூட்டுத்தாபனத்துக்கு அதிகாரம் கையளிக்கப்பட்ட போது இருந்த போதிலும், மீளாய்வு ஆண்டின் இறுதி இறுதியில் கூட்டுத்தாபனத்தால் அவ்வாறு வர்த்தமானியில் வெளியிடப்பட்ட. 07 மாகாணங்களுக்கும் வரையறுக்கபட்டிருந்தது. எல்லை வர்த்தமானியில் இடப்பட்ட பிரதேசங்களில் மேற்கொள்ளப்படுகின்ற அனுமதியற்ற நில மீட்டல் மற்றும் அனுமதியற்ற குடியிருப்புக்களை தவிர்ந்த தடுப்பதற்கும் கூட்டுத்தாபனம் தவறி இருந்தது. உதாரணமாக கூட்டுத்தாபனத்தால் 1996 ஆம் ஆண்டு முதல் 2019 வரை 05 பிரதேச செயலகங்களுக்கு உரிய நீர் தேங்கி இருந்த 09 பிரதேசங்களில் 399.91 ஹெக்டயர் ரில் மேற்கொள்ளல் இடம் பெற்றிருந்த அனுமதியற்ற நிர்மாணங்கள் மற்றும் 1,107 நில மீட்டர்கள் இனங்காணப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதி வரையும் அவ்வாறு இனங்காணப்பட்ட அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்றுவதற்கு கூட்டுத்தாபனம் தவறி இருந்தது. மேலும் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 8(அ) ஆம் பிரிவின் பிரகாரம் நில மீட்டல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்கு நிலம், புரண் நிலக் காணிகளை வெளியிடுவதற்கு உரிய பரிந்துரைகள் கிடைக்கப்பெற்றதன் பின்னர் காணி அமைச்சுக்கு அனுப்ப முடியும். வட மாகாணத்திற்கு உரிய வரைபடம் மற்றும் பட்டோலைகள் கிடைக்கப் பெற்றுள்ளதுடன் பட்டோளைகளை மாற்று நடவடிக்கைகளுக்காக மொழிபெயர்ப்பு நடவடிக்கைகளுக்காக அனுப்பபட்டுள்ளது. உரிய பரிந்துரைகள் துறைகள் பெற்றுக்கொள்ளும் போது பிரதேச செயலாளர்களின் பரிந்துரைகள். மாகாண காணி ஆணையாளர் மூலம் காணி ஆணையாளருக்கும் அவரின் மூலம் மீண்டும் காணி அமைச்சுக்கும் அனுப்ப படுகின்றமையால் இதற்காக கவனத்தில் கொள்ள கூடிய காலம் எடுக்கின்றது. பெரும்பாக கொழும்பு வெள்ள நீர் கட்டுப்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் பத்து ஏக்கருக்கு அண்ணளவான சதுப்பு நில காணியின் அளவன்றில் நீர் தேக்கமாக 1991 ஆம் ஆண்டின் போது அரசாங்கத்திற்கு கையளிக்க பட்டிருந்தது. இந்த பிரதேசங்களில் இடம்பெறுகின்ற அனுமதியற்ற செயற்பாடுகள் மிகவும் உயர்வடைந்து சென்றதுடன் அந்த செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்காக கூட்டுத்தாபனத்தால் சகல நடவடிக்கைகளும் வர்த்தமானி மூலம் பகிரங்கப்படுத்தே வண்டி இருந்ததுடன் அபிவிருத்தி செய்யப்படவேண் டிய காணிகளை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகளை யும் துரிதப்படுத்துதல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | கையளிக்கப்படுகின்ற காணி, கூட்டுத்தாபனத்தால் கட்டடங்கள் நிர்மாணிப்பதற்கும், தொழிற்சாலைகள் வணிக ரீதியில் மற்றும் விவசாய ரீதியான நடவடிக்கைகளுக்காக அபிவிருத்தி செய்ய வேண்டி இருந்த போதிலும், கூட்டுத்தாபனத்தால் அவ்வாறு 1995 ஆம் ஆண்டின் போது அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக கையளிக்கப்பட்ட முத்துராஜவல மற்றும் முதுன் எல பிரதேசங்களில் 800 ஏக்கர் காணி அளவில் மீளாய்வாண்டின் இறுதிவரையில் 25 வருடங்கள் கடந்துள்ள போதிலும் அதனை அபிவிருத்தி செய்யப்பட்ட. அதில் அபிவிருத்தி செய்யப்பட்ட அளவு 400 ஏக்கர் அதாவது 50 சதவீதம் மாத்திரமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | எடுக்கபடுகின்றது. முத்துராஜவல இனை அபிவிருத்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்ட நில அளவில் ஒரு பகுதி, கடல் மணல் சேகரித்து வைப்பதற்கு பயன்படுத்தபடுவதுடன் ஒரு பகுதியில் கழிவுப்பொருள் முகாமைத்துவ செயற்திட்டத்திற்காக பயன்படுத்தபட்டுள்ளது. மிகுதி காணி 51 ஏக்கர் அளவான நிலப்பகுதி கடல் மணல். பம்பல் குளத்தின் மூலம் நிரப்பி அபிவிருத்தி செய்யபட்டுள்ளது. | |
| (இ) | கூட்டுத்தாபனம் 2010 யூலை 14 திகதி வினியோகித்த இலக்கம் 1662/17 என்ற வர்த்தமானி அறிவித்தலின் படி மேல்மாகாணத்தில் அமைந்துள்ள வாய்க்கால் வழிகளின் பால் ஒதுக்கக் காணிகள் (Reservation) பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் மீளாய்வு ஆண்டின் இறுதி வரையிலும் மேற்கூறப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் விநியோகிக்கப்பட்டு 12 வருடங்கள் கடந்து இருந்த போதிலும் அந்த ஒதுக்க காணிகளை இனங்காண்பதற்கோ அல்லது ஒதுக்க காணிகளில் மீள்குடியேறுகின்ற அனுமதியற்ற குடியிருப்பாளர்களை | 2010 யூலை 14 ஆம் திகதி விநியோகிக்கப்பட்ட 1662/17 என்ற வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் வாய்க்கால்களின் ஓரங்களில். கீழ்ப்பகுதிக்கு நேரத்ததாக காணப்பட வேண்டிய பாதுகாப்பு ஒதுக்க அளவு வெளியிடபட்டுள்ளது. அதன் பிரகாரம் மேல் மாகாணத்தில் அமைந்துள்ள வாய்க்கால் வழிகளில் ஒதுக்க காணிகளில் எந்தவொரு நிர்மானங்களுக்காகவும் அனுமதி வழங்காது இருக்குமாறு உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு உரிய வர்த்தமானி பத்திரத்தின் பிரதியுடன் அனுப்பபட்டுள்ளது. | கூட்டுத்தாபனத்தின் அதிகாரம் மற்றும் நோக்கங்களின் பிரகாரம் அனுமதியற்ற. நில மீட்டல்களை தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| அகற்றுவதற்கோ. நியாயமான நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | கூட்டுத்தாபனத்தால் கைப்பற்றபட்டுள்ள வாய்க்கால் வழிகளில் காணப்படுகின்ற அனுமதியற்ற நிர்மானங்களுக்காக சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுத்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | |

## 3.4 விளைவற்ற அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ரூபா 800 மில்லியன். திறைசேரி நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் களிமண்ணை அகற்றும் வெறெவெவ சுத்திகரிப்பதற்கான செயற்திட்டத்தை அமல்படுத்தும் வகையில் இயந்திர உபகரணங்களை பெற்றுக்கொள்வதற்கு ரூபா 216 மில்லியன் தொகை திறைசேரி நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. எனினும் அந்த எல்லை இனை விஞ்சி 2019 ஆகஸ்ட் மாதத்தின் போது ரூபா 320.7 மில்லியன் பெறுமதியான 02 இயந்திரங்கள் கூட்டுத்தாபனத்தால் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், அந்த இயந்திரங்களுக்காக தவணை பணமாக ரூபா 219 மில்லியன் 2023 டிசம்பர் வரையிலும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்பட்டிருந்தது. மேற்கூறப்பட்ட பெறுகை நடவடிக்கைகளின் போது அரசாங்கத்துக்கு செலவிட வேண்டி ஏற்பட்டிருந்த நட்டம் தொடர்பாக அதற்கு பொறுப்புவாய்ந்த தரப்பினரை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சரவை செயலாளரின் இலக்கம் | கொழும்பு பேரவெவ வண்டல் மண் அகற்றுவதற்காக கொள்வனவு செய்யப்பட்ட உங்களின் அவதானிப்புக்களில் குறிப்பிடப்பட்ட 02 இயந்திரங்களும் தற்போது தற்போதைய நிலைமையை பின்வருமாறு.<br>12 அங்குல விட்டத்தை உடைய Cutter Suction Dredger இயந்திரத்தின் அமைச்சரவை அங்கீகரித்த பெறுமதி ரூபா 150 மில்லியன் ஆக இருந்ததுடன், அதன் பெறுமதி யை விஞ்சி பட்டியலின் பெறுமதி ரூபா 244.7 மில்லியன் ஆகும். 12 அங்குல பூஸ்டர் பம்பியன் அமைச்சரவை அங்கீகரித்த பெறுமதி ரூபா 66.0 மில்லியன் ஆகும். இந்த இயந்திரத்தின் பட்டியல். பெறுமதி ரூபா 75.99 மில்லியன் ஆகும். (வற் இன்றி) மேலே குறிப்பிடப்பட்ட இரண்டு இயந்திரங்களையும் | திறைசேரி நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டம் திட்டமிடப்பட்ட முறையில் உரிய முகாமைத்துவத்துடன் அமுல்படுத்த வேண்டி இருந்ததுடன், சட்டரீதியான நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் தவறிழைத்த தரப்பினருக்கு ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 20/1512/306/027 என்ற ரீபீஆர் என்ற 2021 ஏப்ரல் 09 திகதிய கடிதமூலம் அறிவிக்கப்பட்டபோதும். 2023 டிசம்பர் வரை அதற்காக பொறுப்பு வாய்ந்த தரப்பினரை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. மேலும் இவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரங்கள் பயன்படுத்தப்படாமல் 04 வருட காலம் முதல் வேரவெவ பிரதேசத்தில் விளைவற்று காணப்படுகின்றமை அவதானிக்கபட்டது. | கொள்வனவு செய்வதற்கான நிதி ஏற்பாடு. இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தின் நிதியத்திலிருந்து செலுத்தி உரிய இயந்திரம் கொள்வனவு செய்வதற்கு உரிய அங்கீகாரம் எதிர்பார்த்து தயாரிக்கப்பட்ட அமைச்சரவை குறிப்பு ஒன்று தற்போது வரிசை அமைச்சு ஊடாக அமைச்சரவைக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலே குறிப்பிடப்பட்ட இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்கு உரிய ஆதாரமாக குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் விசாரணை மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளபடுவதுடன், அவ்வாறான தீர்மானத்தின் அடிப்படையில் அதன் அங்கீகாரத்தை பெற்றுக்கொண்டதன் பின்னர் இதுதொடர்பான மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | |
| (ஆ) | கூட்டுத்தாபனத்தால் வெல்லன்வில பன்சலைக்கு அருகில் நிர்மாணிக்கப்பட்ட 06 வியாபார கொட்டகைகள் வாடகை அடிப்படையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமல் 2016 ஆம் ஆண்டு முதல் 2023 டிசம்பர் 31 வரையும் பயனற்று காணப்பட்டது. இதன் காரணமாக மீளாய்வாண்டிற்கு ரூபா 3.6 மில்லியன் மற்றும் | நிறுத்தப்பட்டிருந்த 06 வியாபார கொட்டகைகளுக்காக பல சந்தர்ப்பங்களின் போது தேசிய போட்டியாளர் ஒருவரை கோருவதன் மூலம் கேள்வி கோருதல் (calling Bids) மற்றும் முன்மொழிவுகள் கோருதலும் (Calling | வியாபார கொட்டகைகள் கொள்வனவாளர்களுக்கு வழங்கி வருமானத்தை உழைப்பதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 2016 முதல் 2021 டிசம்பர் 31 அன்று வரை ரூபா 21.6 மில்லியன் மற்றும் கூட்டுத் தொகையான ரூபா 25.2 மில்லியன் கூட்டுத்தாபனத்துக்கு இழக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | Proposal) நிதி ரீதியான சாத்தியவள ஆய்வு (Financial Feasible) உடன் பதில் கிடைத்திருக்கவில்லை. அதனால் இந்த வியாபார கொட்டகைகளை வழங்கும் இயலுமை வழங்கக்கூடியதாக இயலுமை குறிப்பிட்டு நேரடியான முன்மொழிவுகளை பெற்றுக்கொள்ளும் நோக்கில் அறிவித்தல் காட்சிப்படுத்தப்பட்ட போதும் திருப்திகரமான பதில் கிடைத்து இருக்கவில்லை. | |
| (இ) | கடல் மணல் அகழ்தல் மற்றும் குவித்தலுக்காக பம்பினை பயன்படுத்தும் நடவடிக்கைகள். கூட்டுத்தாபனத்தால் தற்போது நிறுத்தப்பட்டதன் காரணமாக கடல் மணலை பயன்படுத்துதல் மற்றும் தயாரிக்கும் நடவடிக்கைகளுக்காக மணல் இருப்பு காணப்படாமையினால் மணலை பயன்படுத்துதல் மற்றும் தயாரிப்பதற்காக கூட்டுத்தாபனத்தின் துணை கம்பனி ஒன்றால் கைப்பற்றப்பட்ட ரூபா 93.67 மில்லியன் பெறுமதியான இயந்திர பொறிமுறைகள் எதிர்காலத்தில் பயனற்று போகும் ஆபத்து காணப்பட்டது. | கரையோர மணல் அகழ்வு மற்றும். குவிப்பதற்கு பம்பியினை பயணபடுத்தும் செயற்திட்டம் 2024 ஆம் ஆண்டில் மேற்கொள்வதற்கு. சகல நடவடிக்கைகளும் தயார் செய்து தயார் நிலையில் உள்ளது. அதனால் அந்த கம்பனியால் கைப்பற்றப்பட்ட இயந்திர பொறிமுறைகள் எதிர்காலத்தில் பயனற்றதாகும் என்ற ஆபத்து காணப்படவில்லை. | உரிய இயந்திர பொறிமுறைகளை செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்துதல் வேண்டும். |

**3.5 செயற்திட்டம் அல்லது மூலதன வேலைகளில் தாமதம்.**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 41.44 மில்லியன் ஆனது கெரவலப்பிட்டி பிரதேசத்தில் மூடிய வீதியினை அபிவிருத்தி செய்வது செய்யும் செயற்திட்டத்தை | உத்தேசிக்கப்பட்ட இறுதிப் பகுதி அதைச் சார்ந்த வீதியுடன் தொடர்புபடுத்துவதற் | கூட்டுத்தாபனம் கையேற்ற நிர்மாண நடவடிக்கைகளை விரைவாக பூர்த்தி |

| | | | |
|---|---|---|---|
| | அமல்படுத்துவதற்காக ரூபா 18.2 மில்லியன் வேலை முற்பணம் தொகை 2018 சனவரி 05 திகதி வீதி அபிவிருத்தி அதிகார சபையிலிருந்து பெறப்பட்டிருந்தது 2018 மே 28 ஆம் திகதி வரையில் ரூபா 15.60 மில்லியன் பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அதில். முன்னைய முற்பணம் தொகையாக ரூபா 6.22 மில்லியன் குறைக்கப்பட்டு வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு செலுத்துவதற்காக சமர்ப்பிக்க பட்டிருந்தது. செயற்திட்டத்தின் மிகுதி நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்காக எதிர்ப்பார்க்கப்பட்ட பிரகாரம் ஒப்பந்தம் கையளித்து வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் வீடுகள் அகற்றப்படாமையின் காரணமாக கூட்டுத்தாபனத்திற்கு மேற்கூறப்பட்ட செயற்திட்டத்தை இடைநடுவில் நிறுத்தவேண்டி ஏற்பட்டு இருந்ததுடன் மூடிய வாய்க்கால் வழிகளை இடையூறு ஏற்பட்டதன் காரணமாக மழை காலங்களில் பிரதேசத்தில் வெள்ள நிலைமை ஏற்படுவதற்கும் காரணமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | காக அதில் அமைந்துள்ள அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்றுதல் தேவையாக இருந்தது. எனினும் நாட்டில் காணப்படுகின்ற சுற்றாடல் நிலைமையின் காரணமாக அந்த அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்றுதல். வசதியீனமாக இருந்தமையும், மேலும் சமூக பிரச்சினைகள் ஏற்படக்கூடியதாக இருந்தமையினாலும் அந்த உத்தேசிக்கப்பட்ட முழுமொத்த பணிகளும் நிறுத்தப்பட்டிருந்தது. | செய்தல் வேண்டும். |
| (ஆ) | மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 8,700 ஆன கொலன்னாவ மழை நீர் அகற்றுதல் மற்றும் சுற்றாடலை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் உலக வங்கி உதவியின் கீழ் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டபோதும் பின்னர் அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம் திறைசேரி நிதியத்தின் கோட்பாட்டின் அடிப்படையில் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. செயற்திட்டம் 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 05 வருடங்களில் பூர்த்தி செய்ய வேண்டியிருந்த போதும், 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் 4.1 கிலோமீட்டரை உடைய பஸ்சென்ன எல வீதிக்கு தொடர்புபடுகின்ற 450 மீட்டரை | கொலன்னாவ மழைநீர் அகற்றுதல் மற்றும் சுற்றாடலை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் கீழ் 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையில் பஸ் என்ன வாய்க்காலில் 450 மீட்டரை உடைய வாய்க்கால் வழி வீதி அபிவிருத்தி செய்தல் மாத்திரம் அன்றி அந்த வாய்க்கால் வழியின் அருகிலுள்ள 05 மதகுகளின் வேலைகளும் | நிர்மாண நடவடிக்கைகளை விரைவாக பூர்த்தி செய்து அதன் நலன்களை பொதுமக்களுக்கு வழங்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உடைய உப. வாய்க்கால் வீதியின் அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகள் மற்றும் 05 இது மதகுகளின் நடவடிக்கைகள் மாத்திரம் பூர்த்தி செய்யப் பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தின் பௌதீக செயல் முன்னேற்றம் 6 சதவீதம் ஆன மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன், திட்டமிடப்பட்ட பிரகாரம் திறைசேரி நிதி ஏற்பாடு கிடைக்காமை இதற்கான காரணமாக இருந்தது. | பூர்த்தி செய்யபட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டிற்காக ரூபா 100 மில்லியன் மற்றும் 2023 ஆம் ஆண்டிற்காக ரூபா 250 மில்லியன் திறைசேரி நிதி ஏற்பாடு கிடைத்திருந்தது. டன். அந்த நிதியினை பயன்படுத்தி விரிவான பொறியியல் ரீதியான திட்டம் தயாரித்தல். 02 குளங்கள் அமைத்தல், மணல்களில் கேப்பியன் இடல், 03 மதகுகள் அமைத்தல் போன்ற செயற்திட்டக் கூறுகள் பூர்த்திசெய்யப்பட்டுள் ளதுடன் மேலும் கொலனாவ பிரதேசத்தில் வாய்க்கால் வழி பராமரிப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளபடுகின் றது. இந்த செயற்திட்டத்திற்காக உத்தேசக் கப்பட்ட காணி கைப்பற்றும் அளவிடல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளபடுகின் றது. | |
| (இ) | மாதின்னாகொட வீடமைப்பு செயற்திட்டத்திற்காக கைப்பற்றுவதற்கு உத்தேசக்கப்பட்ட காணியை கைப்பற்றுவதற்கு முன்னர் அதாவது 2018 ஆம் ஆண்டு வரையில் அந்த காணி க்காக ரூபா 112 மில்லியன் செலவிடப்பட்டு, உப நுழைவு வீதி | இந்த கூட்டுத்தாபனத்தால் உத்தேசக்கப்பட்ட பணிகளை இனங்கண்டு அதன் திட்டங்கள் தயாரித்து அந்த வீதி அமைக்கும் | காணியினை கைப்பற்றும் செயற்பாடுகளை துரிதப்படுத்தி பூர்த்தி செய்து செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை பூர்த்தி செய்தல் |

| | | |
|---|---|---|
| ஒன்றை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் மற்றும் 2023 டிசம்பர் வரை காணியை கைப்பற்றமையின் காரணமாக அதற்காக செலவிடப்பட்ட பணம் என்பன பயனற்ற செலவினத்திற்கு உட்பட்டு இருந்தது. | நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது . அது மற்றும் தொடர்புடைய அதன் இறுதி வரையும் வீதியுடன் தொடர்புபடுத்துவதற்காக அது சார்ந்ததாக அமைந்துள்ள அதுக்கு அண்மித்து அமைந்துள்ள அனுமதியற்ற நிருமானங்களை அகற்றுவதற்கு உத்தேசப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அந்த அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்றுவதில் காணப்பட்ட சுற்றாடல் நிலைமையில் எதிர்பாராத விதமாக மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது | வேண்டும். |

### 3.6 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை அணுசக்தி அதிகாரசபையின் ஆய்வுகூட அலகு A கட்டிடம் நிர்மாணிப்பதற்கு கூட்டுத்தாபனத்திற்கு 2014 ஆண்டிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 61.58 மில்லியன் பெறுமதி கூட்டுத்தாபனத்தால் மீளாய்வு ஆண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. கட்டிடத்தை திட்டமிடும் போது ஏற்பட்ட வழுக்கள் உடனான நிலைமையின் காரணமாக Micro Filling இதற்காக கூட்டுத்தாபனத்தால் செலவிடப்பட்ட ரூபா 46.40 மில்லியன் செலவினத்தை மீளளிப்பு செய்து கொள்வதற்கு இலங்கை அணுசக்தி அதிகார சபை தமது இணக்கப்பாட்டை தெரிவித்து இருக்கவில்லை. இது தொடர்பாக பொறுப்புவாய்ந்த தரப்பினருக்கு எதிராக கூட்டுத்தாபனத்தால் | இந்த கட்டிடம் சில Design & Built என்ற திட்ட முறைமையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட மையால் அணுசக்தி அதிகாரசபையின் இலிருந்து அதனை மீளளிப்பு செய்து கொள்வதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுக்கின்றது. | உடன்படிக்கையின் பிரகாரம் பொறுப்புவாய்ந்த தரப்பினரை இனங்கண்டு சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டு இருக்கவில்லை.

## 3.7 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவி அணியினர் 1,800 ஆக இருந்ததுடன் அத்துகதையில் உள்ளபடியான பதவி அணியினர் 1,331 ஆனமையால் கூட்டுத்தாபனத்தின் பதவி அணியில் 469 வெற்றிடங்கள் மற்றும் 29 மிகைகள் காணப்பட்டது. மீளாய்வு ஆண்டின் இறுதி வரையிலும் கூட்டுத்தாபனத்தின் உயர் முகாமைத்துவ பதவிகளில் நிரந்தர பதவி அணியினர் பேரில் 07 பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டதுடன், 2023 டிசம்பர் வரையிலும் அதில் 03 பதவிகளுக்காக ஆட்சேர்த்தல் மேற்கொள்ளப்பட்டதுடன், மிகுதி 04 பதவிகளுக்காக 2023 டிசம்பர் மாதம் வரையிலும் ஆட்சேர் மேற்கொள்ளப்படவில்லை. | 2022 டிசம்பர் 31 ஆம் திகதி வரையில் கூட்டுத்தாபன பதவியணியில் நிரந்தர அடிப்படையில் 1649 பேரும் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் 151 பேருமாக நாம் 1800 பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், அத் திகதியில் கூட்டுத்தாபனத்தில் சேவையில் ஈடுபட்டிருந்த பதவியணி அங்கத்தவர்களின் எண்ணிக்கை 1360 ஆனமையால் நிரந்தர பதவியணியில் காணப்பட்ட பதவிகளுக்குரிய வெற்றிடம் 289 ஆக காணப்பட்டது. அவ்வாறே காணப்படுகின்ற சேவை தேவையின் அடிப்படையில் கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையில் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தினை உள்ளடக்கிய சில பதவிகளில் காணப்பட்ட வெற்றிடங்களுக்காக முறையான பிரகாரம் தகுதியுடையவர்களை சேர்த்துக் கொள்வதற்கு தேவையான அங்கீகாரத்தை வழங்குமாறு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு கோரிக்கை | அங்கீகரிக்கப்பட்ட பதவி அணியில் வெற்றிடங்களை நிரப்ப வேண்டி இருந்ததுடன், அங்கிகரிக்கப்பட்ட பதவி அணியினருக்கு புறம்பாக சேவையில் ஈடுபடுத்தபட்ட உத்தியோகத்தர்கள் தொடர்பாக வெழிப்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் இது வரை உரிய அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. | |
| (ஆ) | 2023 டிசம்பர் வரையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் காணப்படுகின்ற பிரதி பொது முகாமையாளர் மனிதவள அபிவிருத்தி பதவி வெற்றிடமாக காணப்பட்ட போதும் 60 வயதை விஞ்சிய ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் ஒருவர் அமைச்சரவை அங்கீகாரம் இன்றி மற்றும் 2020 ஒக்டோபர் 12 திகதி முதல் 2023 டிசம்பர் 31 வரையும் இந்த பதவியில் ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்துவதற்கு கூட்டுத்தாபனத்தால் நடவடிக்கை எடுக்கபட்டிருந்தது. கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட உள்ளபடியான பதவி அணியினர் தகவல்களில் ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபட இருக்கின்ற உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையில் இந்த உத்தியோகத்தர் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | பிரதி பொது முகாமையாளர் மனித வள பதவிக்கு ஆள் சேர்த்தல் தொடர்பாக பரிசோதனை சபையின் மூலம் வழங்கப்பட்டுள்ள பரிந்துரையின் அடிப்படையில் பணிப்பாளர் சபையின் இணக்கப்பாட்டுடன் அமைச்சரவை அமை. அமைச்சு செயலாளரின் கோரிக்கையின் அடிப்படையில் முன்னாள் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரான கௌரவ அமைச்சரினதும் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. அவ்வாறே அதற்காக தேவையாக கிடைக்கப்பெற்ற அமைச்சரவைக் குறிப்பின் வரைவு வரிசை அமைச்சின் மூலம் அமைச்சரவை மீளாய்வு குழுவிற்கு சமர்ப்பிப்பதற்காக அமைச்சரவை அமைச்சுக்கு சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் நிரந்தர பாதுகாப்பு சேவை உத்தியோகத்தர்கள் 76 இருக்கும்போது மீளாய்வாண்டின் போது ரூபா 59.5 மில்லியன் எல்ஆர்டீசீ சேவை தனியார் கம்பனிக்கு செலுத்தி கூட்டுத்தாபனத்திற்காக பாதுகாப்பு சேவை வசதிகள் பெறப்பட்டிருந்தது. அவ்வாறே கூட்டுத்தாபனத்தின் PL-01 | மீளாய்வாண்டின் போது நாடளாவிய ரீதியில் அபிவிருத்தி செயற்திட்டங்களை கூட்டுத்தாபனத்தில் மூலம் அமுல்படுத்தியதன் காரணமாக அந்த செயற்திட்டங்களுக்கு உரிய வேலைத்தளங்கள் மற்றும் கூட்டுத்தாபனத்தின் ஏனைய கடமை நிலையங்களின் பாதுகாப்பு | காணப்படுகின்ற ஊழியர்களை ஆக்கபூர்வமானதாக வும், செயற்திறனாகவும் சேவையில் ஈடுபடுத்துதல் வேண்டும். |

| | |
|---|---|
| தொகுதியின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட தொழிலாளர் பதவிகள் 412 இல் 347 பேர் நிரந்தர பதவியணியில் இருக்கும்போது எல்ஆர்டீசீ சேவை தனியார் கம்பனியில் இருந்து மனித வலு சேவை பெற்றுக்கொள்வதற்காக. மீளாய்வாண்டின் போது ரூபா 450.61 மில்லியன் கூட்டுத்தாபனத்தால் செலவிடபட்டிருந்தது. அவ்வாறே கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்காக. ரெடேக்கோ கம்பனியில் இருந்து பெறப்பட்ட பதவி அணியினருக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 107.34 மில்லியன் கூட்டுத்தாபனத்தால் செலவிடப்பட்டிருந்தது. | கடமைகளுக்காக ஈடுபடுத்துவதற்கு போதியளவான பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை கூட்டுத்தாபனத்தில் சேவையில் ஈடுபட்டு இருக்காமையின் அடிப்படையில் நாடளாவிய ரீதியில் ஸ்தாபிக்கப்பட்ட வேலை தளம் மற்றும் சேவை நிலையங்களின் பாதுகாப்பு சேவை தொடர்ச்சியாக பேணி செல்வதற்காக LRDC சேவை கம்பனி இலிருந்து பாதுகாப்பு சேவையினை பெற்றுக்கொள்வதற்கு கூட்டுத்தாபனத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |

## 4. கணக்களிப்பொறுப்பும். நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆம் திகதிய பொது முயற்சிகள். சுற்றறிக்கை இலக்கம் 01/2021 செயல் கைநூலின் செயற்பாட்டு கைநூலின் 6.6 பந்தியின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தால் 2022 ஆம் ஆண்டிற்குரிய இறுதி நிதிக்கூற்றுக்கள். 2023 பெப்ரவரி 28 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் 06 மாதங்களை விட தாமதமாகி அதாவது 2023 ஆகஸ்ட் 20 ஆம் திகதி நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை நீதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம். | சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

### 4.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆம் திகதிய | 2021 மற்றும் 2022 ஆம் | பொது முயற்சிகள் |

| | | |
|---|---|---|
| பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் 01/2021 இன் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கும் போது அங்கீகரிக்கப்பட்ட படிவங்களை பயன்படுத்தாதிருந்ததுடன் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களின் பிரகாரம் செயற்பாடுகள் தர்க்க ரீதியில் ஒழுங்குமுறையாகவும் மற்றும் விரிவானதாகவும் சமர்ப்பிக்க வேண்டியிருந்ததுடன் அந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக பொறுப்புவாய்ந்த குறித்துரைத்த உத்தியோகத்தர்களுக்கு கையளித்தல் மற்றும் குறித்துரைத்த கால எல்லையில் காண்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறே அடையப்பட வேண்டிய நோக்கங்களுடன் செயற்பாடுகளை தொடர்புபடுத்த வேண்டியிருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தால் அவ்வாறு மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஆண்டுகளின் போது நாட்டில் எழுந்திருந்த பொருளாதார நெருக்கடி மற்றும் நிச்சயமற்ற நிலைமையின் இடையே செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கும் போது சேவை வழங்குநர்களால் செயற்திட்டத்தின் கீழ் எதிர்காலத்தில் இனங்காண்பதற்கு உள்ள செயற்திட்டமாக கவனத்திற்கொள்ள வேண்டிய அளவினை இனங்காண வேண்டி ஏற்பட்டிருந்தமையால் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கும் போது மேலே காண்பிக்கப்பட்டுள்ள தகவல்கள் மாத்திரம் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்க வேண்டி ஏற்பட்டிருந்தது. | நல்லாளுகை தொடர்பான வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4.3 கூட்டிணைந்த திட்டம்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| கூட்டுத்தாபனத்தால் 2018 – 2022 என்ற 05 ஆண்டு காலப்பகுதிக்காக மாத்திரம் கூட்டிணைந்த திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருந்த போதும் அந்த திட்டத்தில் கூட்டுத்தாபன சட்டத்தின் மூலம் கையளிக்கப்பட்ட பணிப்பொறுப்புக்களான நாடு முழுவதும் அமைந்துள்ள சதுப்பு நிலங்கள் மற்றும் பயன்பாடற்ற அல்லது சேற்று நிலக் காணிகள் இனங்கண்டு அனுமதியற்ற காணிகளை நிரப்புதலைக் கட்டுப்படுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்வதற்கு இயலுமான வகையில் வர்த்தமானி அறிவித்தல் மூலம் பகிரங்கப்படுத்துதல் மற்றும் வாய்க்காலின் ஓரங்களில் ஏதாவது காணிப் பிரதேசமொன்று, வாய்க்கால் ஒதுக்கப் பிரதேசமாக இனங்காணப்பட்டு அந்த ஒதுக்கப் பிரதேசத்தில் தற்காலிக அல்லது ஏனைய நிர்மாணங்களை தடுக்கும் | திருத்தப்பட்ட சட்டத்தின் அனுமதியற்ற மண் நிரப்பல்களை நிறுத்துதல் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்குரிய கூட்டுத்தாபனத்தின் மிகுதி செயற்திட்டங்களில் உள்ளடக்கி கூட்டிணைந்த திட்டம் ஒன்று 2023 – 2024 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப் பட்டுள்ளது. எதிர்காலத்தில் உரிய எதிர்வு கூறப்பட்ட | சட்டத்தில் குறிப்பிடப்பட்ட பணிகள் கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கி இனங்காணப்பட்ட தந்ரோபாய வழிகளை அடைந்து கொள்வதற்கு போதியளவான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| வகையில் வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பகிரங்கப்படுத்துதல் போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கூட்டிணைந்த திட்டத்தில் இனங்காணப்பட்ட உபாய வழிகளை அடைந்து கொள்வதற்கு கூட்டுத்தாபனம் போதியளவான நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் அறிமுகப்படுத்தப்பட்ட பிரதான செயலாற்றல் குறிகாட்டிகள் (KPI) இன் பிரகாரம் அடையப்பெற்ற செயல் முன்னேற்றத்தை மதிப்பீட்டுக்கு உட்படுத்துதலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br>அவ்வாறே 2018 – 2022 காலப்பகுதிக்குரிய எதிர்வு கூறப்பட்ட நிதிக்கூற்றுக்கள் கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் கூட்டிணைந்த நிதிக்கூற்றுக்கள் கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |